பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 15 புதன்கிழமை (1-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 291

# பிக்குமாரின் நேற்றைய உண்ணாவிரதம்

# தீர்வுத்திட்டத்துக்கு எதிரான நிகழ்வாகியது!

## எதிர்க்கட்சிகளும் முழு அளவில் பங்கு

கொழும்பு, ஒக். 1

சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை வரலாற்றுக் குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட வேண்டும் என்று கூறியதற்காக அமைச்சர் மங்கள சமரவீர மன்னிப்புக்கேட்க வேண்டும் என்று கோரி, பௌத்த பிக்குகள் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நேற்றுக் காலை நடத்திய சத்தியாக் கிரகம் மற்றும் உண்ணாவிரத நிகழ்வுகள்—

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு சமர்ப்பித்துள்ள யோசனைகளுக்கு எதிரான போராட்டமாக மாறியது.

அங்கு நடத்த கூட்டத்தில் உரையாற்றியவர்கள் அமைச்சர் மங்கள சமரவீரவை ஒருபுறம் தாக்கிப் பேசியபடி, அரசின் தீர்வு யோசனைகளுக்கு எதிராகவும் தீவிரப் போக்குடன் குரல் எழுப்பினர்.

தேசிய சங்க சபாவும், தேசிய ஒருங்கிணைப்புக் குழுவும் நேற்றைய ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தன.

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் குறித்து ஆட்சேபனை தெரிவிப்பதற்காக பல்வேறு சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் அங்கு பிரசன்னமாகியிருந்ததாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் முனசிங்க, ஐ.தே.க. உறுப்பினர்கள் ஜினதாஸ நியதபால, அல்மன் பீரிஸ், சிங்கள மகா சம்மத பூமிபுத்ர கட்சியின் தலைவர் டாக்டர் ஹரிச்சந்திர விஜயதுங்க, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஸ் குணவர்த்தன, கீதாஞ்சன குணவர்த்தன, மேல்மாகாண சபை அமைச்சரும் தேசிய ஜனநாயக ஐக்கிய முன்னணி லலித் பிரிவு உறுப்பினருமான லஷ்மன் அபயகுணரத்தின, முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரிய' அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் மற்றும் பலர் அங்கு சமுகமளித்திருந்தனர்.

சுமார் ஐந்நூறு பிக்குகளும் ஆயிரம் பொதுமக்களும் நேற்றைய உண்ணாவிரதத்தில் பங்கு பற்றினர்.

சங்கைக்குரிய எத்தயபான தம்மாலக்க தேரர் அனுசாசன உரை நிகழ்த்துகையில்—

பொறுப்புள்ள ஓர் அமைச்சர் சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரிக்கக் கூடாது என்று தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### சக்திவாய்ந்த கடற்கண்ணி கண்டுபிடிப்பு

கிளாலி கடலேரியில்—மறைத்து வைக்கப்பட்டிருந்த—60 கிலோகிராம் எடையுள்ள—உயர் சக்திவாய்ந்த—கடற்கண்ணி ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருந்ததைக் கடற்படையினர் கண்டு பிடித்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன. (உ-35)

### 500 தமிழர்கள் கொழும்பில் கைது!

தலைநகரில் புலிகள் ஊடுருவியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பல இடங்களிலும் கடந்த சில தினங்களாகப் பொலீஸாரும் படையினரும் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இத்தேடுதலின் போது சந்தேகத்தின் பேரில் ஐந்நூறு தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டதாக தகவல் ஒன்று தெரிவித்தது. (உ-6)

# உத்தேச தீர்வுயோசனைக்கு

# அமைச்சரவை அங்கீகாரம்!

## ஏகமனதாக வழங்கியது

கொழும்பு, ஒக்ரோபர் 1

உத்தேச புதிய அரசமைப்புத் திட்டத்துக்கு அமைய அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ளும் திட்டத்துக்கு அமைச்சரவை ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளதாக கொழும்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான அரசுத் தரப்பு யோசனைகள் நேற்று முன்தினம் அமைச்சரவையில் விலாவாரியாக — நீண்ட நேரம் ஆராயப்பட்டது தெரிந்ததே.

யோசனைகள் தொடர்பாக தமது கருத்துக்களை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# காணாமற் போனதன் பின்னர் தகவல் தெரிந்த 176 பேர் விவரம்

## யாழ். செயலகத்துக்கு பட்டியல் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஒக். 1

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதான பின்னர் தகவல் தெரியாதுள்ளவர்கள் தொடர்பாக ஆராய்வதற்காக பாதுகாப்பு அமைச்சு நியமித்த விசாரணைக்குழு இதுவரை மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து கண்டு பிடித்த 176 பேரின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியலை யாழ். செயலகத்துக்கு அனுப்பியுள்ளது.

பெயர் விவரங்கள் 8 ஆம் பக்கத்தில்

இந்த விசாரணைக் குழுவுக்கு கிடைத்த அறுநூறுக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் குறித்து ஆராய்ந்த பின்னர் தம்மால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த 176 பேரின் விவரங்களை வெளியிட்டுள்ளது.

இவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் —

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி, ரணிலுடன் கட்சிகள் பேச்சு நடத்தும்

கொழும்பு ஒக். 1

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் அடங்கிய உத்தேச புதிய அரசமைப்பு நகல் சட்ட மூலம் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அரசியல் கட்சிகளுடன் அடுத்த சில தினங்களுக்குள் முக்கியமான பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

அதிகாரப் பரவலாக்கல் அலகு, அதன் அதிகாரங்கள் ஆகியன பற்றியும், மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் குறித்தும் இந்த பேச்சுவார்த்தைகளின் போது விசேட கவனம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அரசியல் கட்சிகளின் பிரதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டிற்கு வெளியிலும் உண்ணாவிரத நிகழ்வுகள்

## புளொட் அமைப்பு ஏற்பாடு

மட்டக்களப்பு, ஒக. 1

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகிய பின்னர் தகவல் தெரியாதுள்ளவர்கள் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவாகவும்—

அது தொடர்பான கோரிக்கைகளை நிறைவேற்றக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தீர்வுத் திட்டத்தை ஆராய சு.க. இன்று கூடுகிறது

கொழும்பு, ஒக். 1

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் குறித்து விவாதிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு இன்று கூடுகிறது.

சகல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இக் கூட்டத்துக்கு சமுகமளித்து அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் தொடர்பான தமது கருத்தைத் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# 11 முஸ்லிம் மீனவர்களை புலிகள் நேற்று விடுவிப்பு!

## சிங்களவர் ஒருவரும் விடுதலையானார்

திருகோணமலை, ஒக். 1

விடுதலைப் புலிகள் தமது காவலில் தடுத்து வைத்திருந்த 11 முஸ்லிம் மீனவர்களையும் ஒரு சிங்களவரையும் திருகோணமலை மாவட்டம் புடவைக்கட்டுப் பகுதியில் வைத்து நேற்று விடுவித்தனர்.

தியாகி திலீபன் நினைவு தினத்தை ஒட்டி புலிகள் இவர்களை விடுவித்ததாக புலிகள் ஆதரவு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்சு மருத்துவக் குழுவினரின் சேவையை மறக்க முடியாது

## பாராட்டு விழாவில் உரை

நெல்லியடி, ஒக். 1

பிரெஞ்சு மருத்துவக்குழு மந்திகையிலிருந்து சென்றாலும் அவர்களது பத்துவருட கால தன்னிகரற்ற வைத்திய சேவையை வடமராட்சி மக்கள் தமது உயிருள்ள வரை மறக்க மாட்டார்கள்.

மந்திகை மருத்துவமனையில் சேவை புரிந்து, தற்போது பிரான்ஸ் நாட்டுக்குச் சென்ற எம். எஸ். எவ். மருத்துவக் குழுவின் சேவையைக் கௌரவித்து, பாராட்டுரை வழங்கிய பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விழா கடந்த வியாழக்கிழமை மந்திகை மருத்துவமனை மேல் மாடியில் இடம் பெற்றது.

அங்கு தொடர்ந்து பேசிய மாவட்டவைத்திய, வைத்திய அதிகாரி, பிரெஞ்சு மருத்துவக் குழுவினர் தமது 10 வருட கால வைத்திய சேவையுடன் நின்று விடாமல், மந்திகை மருத்துவமனையின் வார்ட் பகுதிகளைப் புனரமைப்புச் செய்து, தீந்தை வகைகளையும் பிரான்ஸிலிருந்து கொண்டு வந்து அழகு படுத்தினார்கள்.

இப்படிப்பட்ட வைத்தியக் குழுவினரின் அளப்பரிய சேவையை வடமராட்சி மக்கள் மறக்க மாட்டார்கள் என்றார்.

இறுதியில் பிரெஞ்சு வைத்தியக் குழுவைச் சேர்ந்த சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் நீக் பதிலுரை வழங்கினார். (இ-109)

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் செல்லப்பா

(உரிமையாளர், முன்னாள் முருகன்ஸ்ரோர்ஸ், நாரம்மல)

மண்கும்பானைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் செல்லப்பா 29-09-1997 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் இராமலிங்கம் வள்ளியம்மை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், சுப்பையா—செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், ஈசன், பார்த்திபன், தினேஷ், ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மகேஸ்வரி, தளையசிங்கம், கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலசிங்கம், நிர்மலாதேவி, சங்கரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பூநகரியில் நடைபெறும்.

தகவல்:
இ. தளையசிங்கம்
(தம்பி)

நாவல்கட்டை லேன்,
கோப்பாய்.

(50200)

### திருமதி மலர்மகள் ஸ்ரீஸ்கந்ததாஸ் M. Sc

(முன்னாள் விவசாய ஆராய்ச்சியாளர், நுவரெலியா, தற்போது சிட்னி பல்கலைக்கழக விரிவுரையாளர்)

யாழ்ப்பாணம் இல 108, அரசடி வீதியை பிறப்பிடமாகவும், ஆஸ்ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மலர்மகள் ஸ்ரீஸ்கந்ததாஸ் 28-9-97 அன்று காலமானார்.

இவர் சட்டத்தரணி ஸ்ரீஸ்கந்ததாஸின் அன்பு மனைவியும், வேலணை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திரு செல்லத்துரை - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும், பொன்னுத்துரை, ஐயாத்துரை, கனகரட்னம், நாகரட்னம் ஆகியோரின் பெறா மகளும், திரு. திருமதி பவதாஸின் அன்பு மருமகளும், அரியராசா, குகநாதன், சண்முகநாதன், காலஞ்சென்ற செந்தில்நாதன், திருமகள் ஆகியோரின் அன்புச் சகோதரியும், லிலியன், புஸ்சாந்தி, சாந்தி, சிவநேசன் ஆகியோரின் மைத்துனியும், தீபசிலோசனா, நிர்மலன், சதீஸ்குமார், பிரதீப்குமார், ரஞ்சித்குமார், ஜயந்தன், நிர்த்திகா, ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30-9-97) செவ்வாய்க்கிழமை ஆஸ்ரேலியாவில் நடைபெற்றன.

தகவல்:
குகநாதன்
சண்முகநாதன்
திருமகள்
(சகோதரர்கள்)

108, அரசடி வீதி,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

06, Moor Road,
Colombo 6

(C/1667)

### சின்னத்தம்பி சந்திரசேகரம் (நயினாதீவு)

(விநியோக முகாமையாளர், பெற்றோலியக் கூட்டுத்தாபனம்-கொழும்பு)

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவிலில் வசித்தவருமாகிய சின்னத்தம்பி சந்திரசேகரம் 30-09-97 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி—வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், திரு. திருமதி கந்தையா, சவுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி செல்வராணியின் (விரிவுரையாளர், தொழில் நுட்பக் கல்லூரி மருதானை) அன்புக் கணவரும், வைத்திய கலாநிதி செல்வி சந்திரிகா, செல்வி ஜெயச்சந்திரிகா (பெற்றோலியக் கூட்டுத்தாபனம்), செல்வி விஜயச் சந்திரிகா, செல்வன் சந்திரகாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி பகிர்வதி, கந்தசாமி, காலஞ்சென்ற பவானி மற்றும் கேதாரகௌரி, தனபாலசிங்கம் (சின்னமணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னசோதி (கனடா), செல்வராசா (கனடா - முன்னாள் முகாமையாளர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை, யாழ்ப்பாணம்), செல்வமலர், சிவமணி, கதிர்காமலிங்கம் (சுருக்கெழுத்தாளர், நீதிமன்றம், கொழும்பு), உலகநாயகி (லண்டன் - முன்னாள் சுருக்கெழுத்தாளர், கமநலசேவை திணைக்களம்), புண்ணியலிங்கம் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), நவரத்தினராசா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02-10-97 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. கந்தசாமி (சகோதரர்)
சி. தனபாலசிங்கம் ( ,, )
சி. செல்வரத்தினம் (சகலன்)
(நல்லூர்)

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி.

(50215)


தெல்பியன் கல்வி நிலையம்
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

Spoken English
By:
Britto
Grammer Classes

ஆரம்பம்:
02-10-1997 வியாழன்
மாலை 1 45 மணி

பிரிவு II (புதிய பிரிவு)

ஆரம்பம்:
02-10-1997 வியாழன்
காலை 8.00 மணி

(50209)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பட்டப்பின் கல்வித்தகைமை பரீட்சை 1995
பகுதிநேரம்/ முழுநேரம்

மேற்படி 1997-10-18 இல் ஆரம்பமாக இருந்த பட்டப்பின் கல்வித்தகைமை பரீட்சைகள் 1995, 1997-10-27 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது. பரீட்சைக்குரிய நேர அட்டவணையை யாழ். பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

- பதிவாளர்

29-09-1997

(சி/1666)


# நெடுந்தீவு கடற் தொழிலாளர் சார்பில் அரச அதிபருக்கு மகஜர்

நெடுந்தீவு, ஒக். 1

நெடுந்தீவு மீனவர்களின் கஷ்டங்களை நீக்குமாறு நெடுந்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் அண்மையில் நெடுந்தீவுக்கு வருகை தந்தயாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்தது.

இதுதொடர்பாக நெடுந்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தலைவர் ப. அமிர்தநாதர் அரச அதிபரிடம் சமர்ப்பித்த மகஜரில் தற்சமயம் தமது எல்லைப்பரப்பில் 300 மீனவ குடும்பங்கள் உள்ளன என்றும் —

சுழற்சி முறையிலான மீளளிப்புக் கடன் அடிப்படையில் தமக்கு மீன்பிடி உபகரணங்களைப் பெற்றுத்தருமாறும்- குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-111)

## பரிசளிப்பு விழா

நெல்லியடி, ஒக். 1

வரணி இடைக் குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும். (இ-109)

## ரெலிக்கொம் ஊழியரின் பொங்கல்

யாழ்ப்பாணம், ஒக். 1

குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் தொலைத்தொடர்பு விருத்திப் பணிகள் தடங்கல் இன்றி நிறைவேற ஆசீர்வாதம் வேண்டி சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவன யாழ். ஊழியர்கள் பண்ணை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நேற்று பொங்கல் நிகழ்ச்சி ஒன்றை நடத்தினர்.

ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதி உதவிப் பொது முகாமையாளர் சி. கனகசூரியர் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் யாழ். தொலைத்தொடர்பு பொறியியலாளர் த. பாலசுப்பிரமணியமும் கலந்து கொண்டார்.

ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ். மாவட்ட ஊழியர்களுடன் கிழக்கு மாகாண ஊழியர்களும் பங்குபற்றினர். (உ-3)

## ஆசிரியர்கள் ஆள்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சை

அரசாங்கப் பாடசாலைகளுக்குத் தமிழ் மொழி மூல தகுதிகாண் ஆசிரியர்களை ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ். கல்வித் திணைக்களத்தில் 3 ஆம் திகதி (நாளை மறுதினம்) முதல் 5 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

யாழ் வந்துள்ள மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி இந்த நேர்முகப் பரீட்சையை நடத்துவார்.

189 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர், விபரங்கள் அடங்கிய பட்டியலை 'உதயன்' அலுவலகத்தில் வேலை நேரத்தில் பார்வையிடலாம். (உ)

## சுகாதாரப்பணியாளர் வீடுகளுக்கு விஜயம்

யாழ் மாநகரசபைப் பிரதேசத்தில் உள்ள சகல வீடுகளுக்கும் சுகாதாரப்பணியாளர் விஜயம் செய்து வருகின்றார்கள்.

யாழ் மாநகரசபைப் பிரதேசத்தின் அடிப்படைச் சுகாதாரத் தடுப்புச் சேவைகள் ஆகிய விடயங்கள் தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு வசதியாகவே மாநகரசபைப் பிரதேசத்துள் வசதியும் சகல குடும்பங்களின் விவரங்களையும் திரட்டுவதற்குப் பயிற்சி பெற்ற பணியாளர்கள் வீடுகள் தோறும் தரிசிப்புச் செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது,

இப்பகுதி மக்களின் நீண்டகால நன்மை கருதி இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் —

எனவே அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்குமாறும் —

யாழ். மாநகரசபை சுகாதார அதிகாரி கேட்டுள்ளார்.


எமது புதிய வெளியீடு

மம்முட்டி, கௌதமி நடித்த
MR ஆனந்தன்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
[50214]



ஞானோதயா அக்கடமி
கண்டி சாலை, சாவகச்சேரி.

எழுதுவினைஞர் போட்டி பரீட்சைக்கான பொது உளச்சார்பு விடயங்கள்.

ஆரம்பம்:-
02-10-1997
மாலை:- 2 மணி
[50213]



வெளிவந்துள்ளது!
அஸ்ரன் பப்ளிகேசன்ஸ்
O/L 1988 - 1996
December
வினா - விடைகள் வெளிவந்துவிட்டன.
தொடர்பு:
சாயி மெடிக்கல்ஸ்
பலாலி வீதி,
திருநெல்வேலி.
(50208)



கமநல சேவைகள் திணைக்களத்தின்
40 ஆவது ஆண்டு நிறைவு தின வாழ்த்து

விவசாயப் பெருமக்களுக்கு பல வழிகளிலும் பெரும் சேவை ஆற்றி வரும்
கமநல சேவைகள் திணைக்களம்
இன்று 01-10-97 ஆம் திகதி தனது 40 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்கின்றது. தனது சேவையை மென்மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் இன்று
மாவட்ட
கமநல உள்ளீடுகள் விற்பனை நிலையத்தை
திருநெல்வேலியில் திறந்து வைக்கும் திணைக்களத்தின் சேவைகள் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

விவசாய சம்மேளனங்கள்,
கமநல கேந்திர நிலையம்.

(50212)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம் யாழ்ப்பாணம்

# அநாதரவாகிவிட்ட முதியோர் பலருக்கும் வாழ்க்கை நிழல் தரும் சாந்தி நிலையம்

சர்வதேச முதியோர் நாள் இன்றாகும். அதனை முன்னிட்டு கைதடியில் சாந்தி நிலையம் முதியோர் இல்லத்துக்கு விஜயம் செய்த உதயன் செய்தியாளர் தொகுத்து அளிக்கும் கட்டுரை இது.

காலிப் பட்டணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மெதபாலவுக்கு (60 வயது) கைதடி முதியோர் இல்லந்தான் சகலமும். இங்குள்ள 7 ஆம் இலக்க விடுதியில் தங்கியுள்ள இந்த முதியவர் வட்டுக்கோட்டை பேக்கரி ஒன்றில் தொழில் செய்தவர். 24 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் வதியும் தான் தனது உறவினர்களுடன் சேர்ந்து கொள்ள விரும்பவில்லை என்றும் இடப்பெயர்வின் போது இந்த இல்லத்தில் அடைக்கலமடைந்த தாம், சொந்த வீட்டில் இருக்கும் உணர்வுடன் உள்ளதாகவும் மிக உற்சாகத்துடன் கூறினார்.

ஏதோ ஒரு காரணத்தால் தனிமைப்பட்டு ஆதரவற்றிருக்கும் முதியோரைப் பேணுவதற்கு இது போன்ற இல்லங்கள் இன்றியமையாதவை என்பதைப் புரிந்து கொண்டு 43 ஆண்டுகளுக்கு முன் சாவகச்சேரித் தொகுதிப் பிரதிநிதியாக இருந்த திரு. வீ. குமாரசாமி அவர்களின் முயற்சியால் கைதடி அரசினர் முதியோர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையில் அனுராதபுரம் மீரியகம, கைதடி ஆகிய மூன்று இடங்களில் மட்டுமே முதியோர்களுக்கான இல்லம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கைதடி முதியோர் இல்லத்தின் நுழைவாயிலின் தென்புறமாக இந்துக்களுக்கான வழிபாட்டுத் தலமும் வடபுறத்தில் கிறிஸ்தவர்களுக்கான திருச் சொரூபக் கூடும் ஆன்மீகச் சூழலை உருவாக்குகிறது. குளிர்தரு நிழல் மரங்கள் நிறைந்த அழகிய இயற்கைச் சூழலில் அமைதி ததும்பக் காணப்படுகிறது இந்த இல்லம். அதன் பொறுப்பதிகாரி திருமதி இராஜேஸ்வரி துரைரெத்தினம். ஏனைய பணியாளர்களும் வழங்கும் இதய சுத்தியுடனே மனத் தூய்மை நிறைந்த சேவை அங்கேயுள்ள அத்தனை முதியவர்களுக்கும் மனச் சாந்தியளிக்கிறது என்பதை அங்கு செல்பவர்கள் நேரடியாகவே உணர்ந்து கொள்ள முடியும்.

### தேவாரம் பாடி அமைதி பெறுவோம்

கைதடி முதியோர் இல்லத்திற்குச் சென்றகாலை வேளையின்போது வழிபாட்டுத்தலத்தில்இருந்துகாற்றுடன் கலந்து வந்த இனிமையான பக்திப் பாடலைப் பாடி முடித்த சின்னத்தம்பி சுந்தரம் (77வயது) திருகோணமலையில் பிறந்து யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டில் திருமணம் செய்து சிறிய அளவில் வைத்தியத் தொழிலை மேற்கொண்டிருந்தவர்.

பிள்ளைகள் இல்லை. மனைவி பிரிந்து சென்று விட்டார். இது குறித்து நான் ஏன் வருத்தப்பட வேண்டும். இறைவனே எனக்கு உதவுவது போன்று இங்கு எல்லா உதவிகளும் கிடைக்கின்றன. தினமும் காலையில் சிறிது நேரம் தேவாரம் பாடிச் செல்வதில் மனம் அமைதியடைகிறது—என்றார் என்னிடம்.

இந்த ஆலயத்தில் தனது வழிபாட்டை முடித்த குருசிங்கம் ராஜலட்சுமி (70 வயது) என்ற மூதாட்டி வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஈச்சமோட்டைப் பகுதியில் திருமணம் செய்ததாகவும் கணவன் இறந்துவிடவே எட்டு வருடங்களாக, இந்த முதியோர் இல்லத்தில் தாம் சந்தோசமாக வாழ்வதாகச் சொன்னார்.

பிள்ளைகள்...? — என்று கேட்டதற்கு;

வவுனியாவில் திருமணம் முடித்த மகன் பணத்துடன் சென்ற போது பணத்தைப் பறித்து மகனையும் கொன்றுவிட்டார்கள். மகன் ஏழு பிள்ளைகளுடன் மிகவும் வறுமையில் வாழ்கிறார் அதனால் தான் சாந்தி நிலையத்தில் சேர்ந்து கொண்டேன் — என்று தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டுப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் இங்கு தங்கியுள்ளனர் என முடிவு செய்துவிடல்தவறு. மாத்தளையைச் சேர்ந்த அப்புஹாமி சமீபத்தில்தான் இங்கு மரணமானார். 1965 இல் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியின்போது, நாவலப்பிட்டி பகுதியில் வீதிகளில் அலைந்து திரிந்தார்கள் என்ற குற்றச் சாட்டில் பொலிஸாரால் பிடிக்கப்பட்டு ஹங்கொடவில சிறையில் இருந்த பெண்களில் நாற்பது முதல் நாற்பத்திரெண்டு வரையானோர் இந்த இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனராம். அவர்களில் பலர் இறந்துபோக, ஏழு பேர்கள் இன்னும் இங்கு வாழ்கின்றனர்.

இவர்களில் சிவப்பி (78 வயது), மீனம்மா (65வயது) இருவரும் தாம் கடையில் பொருள் வாங்கச் சென்ற சமயம், 'வீதியில் அலைந்தார்கள்' என்று கூறி பொலீஸார் பிடித்துப் பின்னர் நீதிமன்ற விசாரணையின் பின்னர் இங்கே அனுப்பிவிட்டதாகவும், தமது கணவர்கள் இறந்துவிட்டதாகவும் சொன்னார்கள். இருவரும் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் அன்னியோன்னியமாக இருந்ததைக் காணமுடிந்தது. 'அதிகாரி அம்மா' தங்களை அன்புடனும் பரிவுகாட்டியும் பராமரிப்பதாகச் சொன்னார்கள்.

பெரும்பாலான முதியவர்கள் தமது பிள்ளைகளின் வறுமை நிலையில் தாங்கள் ஒரு சுமையாக அமைந்துவிடக் கூடாது என்ற எண்ணத்துடன் இந்த இல்லத்தை நாடியதாக அவர்களுடன்உரையாடியதில் அறிய முடிந்தது. ஏதாவது 'வீட்டில் விஷேசம்' என்றால் பிள்ளைகள் தம்மைக் கூட்டிச் சென்று பின் கூட்டிவந்து விடுவதாகவும் பலர் கூறினார்கள்.

## சமூகத்தின் கருணையும் தர்மமும் அவர்களுக்கு மிகவும் தேவை

### பென்சன் வருகிறது காசு ஏன்?

தவிர, ஓய்வூதியம் பெறுபவர்களும் இங்கு உள்ளனர். ஓய்வூதியம் பெறும் ஆசிரியர் க. நாகலிங்கம் லண்டனில் உள்ள பிள்ளைகள் தம்மை அழைத்ததாகவும், விசா கிடைக்காததுடன் மனைவியும் இறந்து விடவே தான் இங்கு வந்து விட்டதாகவும் கூறுகிறார்.

### நெடுந்தீவு லக்ஸ்மன்

பிள்ளைகள் உங்களுக்கு உதவுகிறார்களா? என்று கேட்டதற்கு — ''பென்சன் வருகிறது எனக்கேன் காசு?'' என்று திருப்பிக் கேட்டார்.

பிள்ளைகளைக் குறை சொல்ல விரும்பாத தந்தையின் பாசம் அது! பிள்ளைகள் வெளிநாடுகளில் இருப்பதால் வேறு உதவிகளற்ற நிலையில் உள்ளவர்களும் இந்த இல்லத்தைத் தமதாக்கிக் கொண்டுள்ளனர்.

''சாந்தி நிலையம்'' என்று பெயர் கொண்ட இந்த முதியோர் இல்லத்திற்கான அடிக்கல் இலங்கையின் முதலாவது பிரதமர் டி. எஸ் சேனநாயக்காவினால் 1952 தை மாதம் 26 ஆம் திகதி நடப்பட்டது.

1954 ஒக்ரோபர் இரண்டாம் திகதி பிரதம அமைச்சராக வருகை தந்த சேர் ஜோண் கொத்தலாவல இந்த விடுதியைத் திறந்து வைத்தார்.

இன்று இந்த இல்லத்தில் ஆண்கள் 123 பேரும் பெண்கள் 106 பேரும் ஆக 229 பேர்கள் வாழ்கின்றனர். மின்சார இணைப்புக்கள் கிடைக்கும் பட்சத்தில் 340 வயோதிபர்கள் தங்கக் கூடிய வசதிகள் இருப்பதாக பொறுப்பதிகாரி இராஜேஸ்வரி உதயனுக்குத் தெரிவித்தார்.

### 28 ரூபாவுக்கு ஒரு நாள் உணவு

பிரார்த்தனை மண்டபம், உணவு மண்டபம், களஞ்சியப் பகுதி, நான்கு சமையல்அறைகள் தாதிமார்களுக்கான அறைகளென கட்டட வசதிகள் நிறைந்த முதியோர் இல்லமாகஇது விளங்குகிறது.

உணவைப் பொறுத்தவரை ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூபா 28 மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளதால் சிறந்த போஷாக்கு மிக்க உணவுகளை வழங்குவது கஷ்டமாக உள்ளதெனக் கவலையுடன் தெரிவிக்கப்பட்டது. முதியோருக்கு படிப்பக வசதிகளும் உண்டு. பொது மக்கள் முதியோர்களுக்கு உதவக் கூடிய நூல்களை அன்பளிப்பாக வழங்கினால் ஏற்றுக் கொள்ளப்படும் எனப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சாந்தி நிலையத்துக்கு மின்சார வசதி ஏற்படுத்தப்பட வேண்டியது மிக அவசியமாகிறது. இரவு நேரங்களில் பார்வை குறைந்தவர்கள் பெரும் கஷ்டமுறுகின்றனர். மங்கல் வெளிச்சத்தில் அவர்கள் தமது கடமைகளைச் செய்யமுடியாதுள்ளதாகப் பலரும் தெரிவித்தனர்.

கிறிஸ்தவ வழிபாட்டுத் தலத்தில் மதகுருவை வரவழைத்து திருப்பலிகள் நடத்த வேண்டும் எனவும் ஆத்ம திருப்திக்கு அது முக்கியம் எனவும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த முதியவர் கருத்துத் தெரிவித்தார்.

தமது இயலாமை காரணமாக விடும் சிறிய தவறுகளுக்காக ஊழியர்கள் சிலர் தம்முடன் சிலவேளைகளில் சினமுறுவதைத் தவிரப் பெரிதாகக் குறைசொல்ல ஏதும் இல்லை என்று முதியவர்கள் பலரும் கூறினர்.

உணவு, வெளிச்சவசதிகள், வைத்திய சேவைகள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும், அப்போதுதான் இந்த இல்லத்தின் முழுப்பயனையும் முதியவர்கள் பெறக் கூடியதாக இருக்கும் என்பதை நிர்வாகம் மனதில் கொள்ள வேண்டும்.

கைவிடப்பட்டு, அல்லது ஆதரவளிக்க அரவணைக்க எவருமின்றி அநாதரவாகித் துயரப்படும் முதியவர்களுக்கு சாந்தி நிலையம் ஒரு நிழல் மரம். இதன் சேவைகள் மகத்தானவை. தென்மராட்சி பிரதேச செயலர் திரு சுந்தரம்பிள்ளை கூறியது போல், சொந்த வீடுகளில் இருக்கும் முதியவர்கள் பெறாத எத்தனையோ நன்மைகளைப் பெறும் இங்குள்ள முதியவர்கள் ஒரு வகையில்உண்மையில்அதிர்ஷ்டசாலிகள் தான்.

முதியவர்கள் சமூகத்திலிருந்து புறந்தள்ளப் படாமல் பேணப்பட வேண்டியவர்கள். தமது வாழ்க்கையின்இறுதிக்காலத்தைககழிக்கும்அவர்களுக் மக்களின், சமூகத்தின் கருணையும் தர்மமும் மிகவும் வேண்டப்படுவனவாகும்.

## முதிர்ந்த நண்பர்களுக்கு 10 பேறுகள்!

★ காலடி வைக்க முடியாமலும் கை தளரும் கரங்களையும் உடைய எம்மைப் புரிந்துகொள்வோர் பேறு பெற்றவர்கள்.

★ இன்று என் காதினால் மற்றோர் சொல்வதை அறிந்து கொள்ளமுடியாதிருப்பதை இட்டு துயருறும் எம்மை அறிந்து கொளவோர் பேறு பெற்றவர்கள்.

★ எம் கண்களும் மங்கிப் போய், எமது செயற்பாடுகளும் மந்த கதியில் இருப்பதை உணர்வோர் பேறு பெற்றவர்கள்.

★ இன்று என் விருந்து அருந்தும் மேசையில் கோப்பியை தவறுதலாகச் சிந்துவதை குறையாகக் கருதாதோர் பேறு பெற்றவர்கள்.

★ எம்மோடு சிறிது வேளை புன்னகை பூத்த முகத்துடனிருந்து உரையாடுவோர் பேறு பெற்றவர்கள்.

★ ''நீங்கள் அந்தக்கதையை இன்று இருதடவை கூறினீர்கள்'' என்று எமக்குக் கூறாதவர்கள் பேறு பெற்றவர்கள்.

★ நேற்று நிகழ்ந்தவற்றை மீண்டும் இன்று ஞாபகத்திற்கு கொண்டுவரும் வழியைக் காட்டுவோர் பேறு பெற்றவர்கள்.

★ நான் தனிமையில் அல்ல; எனக்கு மதிப்பளிக்கப்படுகிறது, எனக்கு அன்பு கிடைக்கிறது என உணர வைக்கும் உள்ளங்கள் பேறு பெற்றவர்களுடையனவே.

★ நான் பலமிழந்து என் வாழ்க்கையை சுமக்க முடியாமலிருப்பதை உணர்ந்து கைகொடுக்கும் கரங்கள் பேறு பெற்றவர்களுடையனவே.

★ அன்பு வழிகள் மூலம் என் இறுதி வாழ்நாள்களை இன்பமாக்கி இறுதி யாத்திரை மூலம் நிரந்தர வீட்டை நுகர்வதற்குச் செய்தவர்கள் பேறு பெற்றவர்கள்.

—எஸ்தர் மேரி வாக்கர்

[தமிழாக்கம்: துரை ஆரோக்கிய நாதன்]

## மின் இணைப்பு 'பியூஸ்' எரிந்து மின் விநியோகம் பாதிப்பு

மின் இணைப்பு ''பியூஸ்'' எரிந்து விட்டதன் காரணமாக உரும்பிராய்ப் பகுதியில் சில வீடுகளின் மின்விநியோகம் நின்றுவிட்டது. நீரிறைக்கும் மோட்டார், அயன்பெட்டி ஆகியவைகளை உபயோகித்ததனால் ஏற்பட்ட மின் அழுத்தமே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இக்காரணிகளினால் மின் விநியோகம் நின்றால் புதிய 'பியூஸ்' இணைத்து மீண்டும் மின்சாரம் வழங்கச் சில நாள்கள் செல்லும் என மின்சாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

மூன்று பல்புகளைப் பயன்படுத்த மட்டுமே மின்சாரம் விநியோகிக்கப்பட்ட போதிலும் சிலர் மேலதிக தேவைகளுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவதாக மின்சாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர். (இ-154)

## திருட்டு

செம்பியன்பற்று, தாளையடியிலிருந்து உடுத்துறை வரை நூற்றுக்கணக்கான வீடுகளின் கூரை மரங்கள், ஓடுகள் ஆகியவை தினமும் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன. சில வீடுகள் உடைக்கப்பட்டு கற்களும் ஏற்றப்படுகின்றன.

இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றோரின் வீடுகளும், சொந்த இடங்களை விட்டு உறவினர் வீடுகளில் தங்கியுள்ளவர்களின் வீடுகளுமே இவ்வாறு உடைக்கப்படுவதாக [illegible] தெரிவிக்கின்றனர். (இ-117)

### வடமராட்சியில்

## பால் கொள்வனவு, விற்பனை நிலையங்கள் திறக்கப்படும்

வடமராட்சிப் பகுதியில் மூன்று இடங்களில் பால் கொள்வனவு, விற்பனவு நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

வடமராட்சி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவின் கீழ், மந்திகை, நெல்லியடி, உடுப்பிட்டி ஆகிய மூன்று இடங்களிலேயே இந் நிலையங்கள் விரைவில் திறந்து வைக்கப்படுமென, மேற்படி கூட்டுறவுச் சங்கத்தலைவர் சி. கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு இந் நிலையங்களில் நியமனம் வழங்கப்படுமென்றும் அவர் கூறினார். (இ-109)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு மாத சேவல் கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. K.V. சாமி, 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

[50192]

## வாடகைக்கு

சாவகச்சேரி பொதுச் சந்தையை அண்மித்த கண்டி வீதியில் ஹோட்டல் கூல்பார் நடத்தக்கூடியதும் குடியிருப்பு களஞ்சிய. கிணறு மலசலகூட வசதிகளையும் கொண்ட கடைக் கட்டடம் வாடகைக்கு உண்டு. தொடர்பு: ச. திரவியம். கராஜ் உரிமையாளர், சாரதா வீதி, சாவகச்சேரி.

[சி/1661]

## தவறிவிட்டது

151/1 கோவில் வீதி நல்லூரைச் சேர்ந்த மண்டலேஸ்வரன் கேதீஸ்வரன் என்பவரது 772252722V இலக்கங் கொண்ட தேசிய அடையாள அட்டை, 0 9 02030746 இலக்கங் கொண்ட விசேட அடையாள அட்டை என்பன இந்துக் கல்லூரிக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். D.M.I. 233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[சி/1663]

## ஒலிப்பதிவு நாடாக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 1

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கு ஆண்டு 6 இன் செயன் முறைப் பாடங்களுக்கான ஒலிப்பதிவு நாடாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இசைப்பாடத்தில் செயன் முறைக் கல்வியை விருத்தி செய்யும் வகையில் 10 பாடல்களைக் கொண்ட இந்த ஒலிப்பதிவு நாடாக்கள் தென்மராட்சி கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த 15 பாடசாலைகளுக்கு கோட்டக் கல்வி அலுவலரால் வழங்கப்பட்டுள்ளன. (இ)

## தையல் பயிற்சி ஆண்டு விழா

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் தேசிய தொழில் பயிலுனர் சபையின் அனுசரணையுடன் இயங்கி வரும் கரணவாய் வடக்கு தையற் பயிற்சி நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா மேற்படி தையற் பயிற்சி நிலையத்தில் க. பரஞ்சோதி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. கரவெட்டி பிரதேச செயலர் திரு. எஸ். ஸ்ரீநிவாசன் பிரதம விருந்தினராகவும், தேசிய தொழில் பயிலுனர் சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ஏ. வி. செல்லையா, வடக்குக் கிழக்கு மாகாண சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் திரு. வீ. வீரபத்திரபிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

(இ-109)


**A/L 98**

**பங்குடமை**

ஆசிரியர்:
**D. SAM**

ஆரம்பம்:- **04 - 10 - 97**
சனி காலை 10 மணிக்கு

**D. M. I.**
233, Stanley Road,
Jaffna.

(சி/1648)



உ
ஓம் சக்தி
**சாவகச்சேரி**

# அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் நவராத்திரி விழாவும் கேதாரகௌரி விரதமும்

அன்புடையீர்!

எதிர்வரும் **02 - 10 - 1997** வியாழக்கிழமை நவராத்திரி விழா ஆரம்பமாகி **11 - 10 - 1997** சனிக்கிழமை விஜயதசமி மானம்பூ உற்சவத்துடன் பூர்த்தி அடையும். நவராத்திரி விழா பூர்த்தி அன்று கேதார கௌரீஸ்வர விரதம் ஆரம்பமாகும். தொடர்ந்து 21 நாள்கள் நடைபெறும் இவ்விழாவில் கலந்து கொண்டு கேதார கௌரி விரதம் அனுஷ்டிப்பவர்கள் முன் கூட்டியே கோயில் காரியாலயத்தில் பதிந்து கொள்ளவும்.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா,
ஆலய தர்மகர்த்தா.

(50123)



# யாழ். BEACON

நெல்லியடி கிறிஸ்ரல் சென்ரரில்

## 98 DAY CLASS
(பகல் நேர வகுப்பு)

## கலை, வர்த்தக பிரிவுகள்

(யாழ். BEACON முன்னணி ஆசிரியர் குழு)

| | |
|---|---|
| கணக்கீடு | — D. SAM |
| பொருளியல் | — அன்ரனி |
| வணிகக் கல்வி | — B. பசில் |
| வணிகப் புள்ளி விவரவியல் | — T. தவசேகர் |
| தமிழ் | — கமலரூபன் |
| அளவையியல் | — பிரபல ஆசிரியர் |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | ] பிரபல ஆசிரியர் |

ஆரம்பம்;- **06 – 10 – 1997**
திங்கள் மு. ப 9-00 மணி.

(50137)



உ
**கோண்டாவில் கிழக்கு**
அருள்மிகு
ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானம்
வருடாந்த

# மகோற்சவ விஞ்ஞாபனம்

**1997**

புரட்டாதி **15 (01-10-97)** புதன்கிழமை
பூர்வாங்கக் கிரியைகள்

புரட்டாதி **16 (02-10-97)** வியாழக்கிழமை
மு. ப. 10 மணி கொடியேற்றம்

புரட்டாதி **21 (07-10-97)** செவ்வாய்க்கிழமை
மு. ப. 10 மணி பன்னிரு ஆழ்வார் உற்சவம்

புரட்டாதி **22 (08-10-97)** புதன்கிழமை
பி. ப, 1 மணி வேட்டைத் திருவிழா

புரட்டாதி **23 (09-10-97)** வியாழக்கிழமை
மு. ப. 10 மணி அநந்த சயன உற்சவம்

புரட்டாதி **23 (09-10-97)** வியாழக்கிழமை
மாலை 5 மணி சப்பறம்

புரட்டாதி **24 (10-10-97)** வெள்ளிக்கிழமை
மு, ப. 10 மணி ரதோற்சவம் (தேர்)

புரட்டாதி **25 (11-10-97)** சனிக்கிழமை
மு. ப. 10 மணி தீர்த்த உற்சவம்

புரட்டாதி **26 (12-10-97)** ஞாயிற்றுக்கிழமை
பி. ப. 2-மணி திருக்கல்யாணமும்,
பூங்காவன உற்சவமும்

புரட்டாதி **27 (13-10-97)** திங்கட்கிழமை
காலை 8 மணி ஆஞ்சநேயர் பொங்கல்

புரட்டாதி **28 (14-10-97)** செவ்வாய்க்கிழமை
காலை 10 மணி பிராயச்சித்த அபிஷேகமும்,
வாகனப் பூசையும்

ஆலய பிரதம குரு (மஹோற்சவ குரு)
**பிரம்மஸ்ரீ சி. சிவகணேசக் குருக்கள்**

சாதக ஆச்சாரியார்
**தா. மகாதேவக் குருக்கள்**
(குருகுல அதிபர், இணுவில்.)

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

ஆலய பரிபாலன சபையும்,
உபயகாரரும்.

விளம்பர அன்பளிப்பு:
**திருமதி அரசரட்ணம் புதல்வர்கள்**
**கோபிராஜ், மனோகரராஜ்**
ஆசிமட வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(50195)


# இதய அஞ்சலி

எமது சக மாணவன்
**ந. அகிலனின் தந்தையாரான**
**வே. நற்குணராஜா**

அவர்களின் பிரிவுத் துயரில் வாடும் குடும்பத்தாருடன் நாமும் இணைந்து கண்ணீர்ப் பூக்களை காணிக்கை ஆக்குகின்றோம்.

**ATI N. D. B. S இறுதி வருட மாணவர்களும், விரிவுரையாளர்களும், ATI உயர்தொழில்நுட்ப நிறுவனம்.**

(50202)

# ஓராண்டு நினைவலைகள்

மலர்வு: 17 — 08 — 1970



பறிப்பு: 01 — 10 — 1996

## அமரர் அந்தோனி றெஜினோட்

(முன்னாள் சிற்றூழியர், தெல்லிப்பழை வைத்தியசாலை)

அன்பு மகனே! ஆண்டு ஒன்று சென்றதடா!
ஆண்டொன்று சென்றாலும் ஆறாது எம்துயரம்
உன் அழகுமுகம் எம் நெஞ்சினிலே
அணையாத தீபமாகியது.
மண்வாழ்வில் நீ செய்த மகத்தான பணிகள் பல
ஆதுலர் சாலையில் நீர் ஆற்றிய பணிகளை
மனமார நாமும் நம் சமூகமும் நோக்குகின்றோம்
ஆண்டவர் இயேசுவை வேண்டுகின்றோம்
ஆறுதலளிப்பீர் ஜீவனுக்கு என்றுமே!

பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதரர்கள்,
சகோதரிகள்.

50/1, இராஜசிங்கம் வீதி,
திருநகர், யாழ்.

(50145)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 05 — 07 — 1949



உதிர்வு: 24 — 09 — 1995

## திருமதி மனோன்மணி கிருஷ்ணபிள்ளை

திதி: 01 - 10 - 1997

பாசத்தின் ஒளி விளக்கே - எம்மைப்
பாராமல் போனது தான் எங்கே?
உங்கள் பிரிவு தான் ஈராண்டு - ஆனால்
இடியேறித்தான் போய் நிற்கின்றோம்
இடைநடுவில் சென்றதேனோ? - நாங்கள்
இன்பம் இல்லாமல் தவிப்பதேனோ!
ஈராண்டு நினைவினிலே – நாங்கள்
ஈரத்தோடு அனுஷ்டிக்கின்றோம் - அம்மா!

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்

கணவன்: பா. கிருஷ்ணபிள்ளை,
பிள்ளைகள்: ப. கிருஷ்ணலோசனா (கனடா)
கி. கிருஷ்ணபாபு (டென்மார்க்)
கி. கிருஷ்ணராஜா (கனடா)
கி. கிருஷ்ணபிரபு
கி. கிருஷ்ணசர்மினி
மருமகன்: நா. பத்மநாதன் (கனடா)
பேரப்பிள்ளைகள்: ப. நிரோசன் (கனடா)
ப. கஜானன் (கனடா)

நாவலடி,
உடுப்பிட்டி.

(49781)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு ஊழியர் சம்பளத்திட்டம் அடுத்த 2 வாரங்களில் வெளிவரும்

யாழ்ப்பாணம், ஒக். 1

கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம் அடுத்த இரண்டு வராங்களில்வெளிவரும்என்று வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாள்ளர் கே. சண்முகலிங்கம் தெரிவித்தார்.

சென்ற வாரம் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனவு சமாசத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அதன் இயக்குநர்கள் மற்றும் பலநோசகுக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடலில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்த சமாசத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஏற்கனவே இது பற்றி அவருடன் சலந்துரையாடியது பற்றி நினைவூட்டி கூட்டுறவு ஊழியர்களின் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி நிலைமையை தெளிவுபடுத்தும்படி கோரிய போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பல்வேறு முக்கிய பிரச்சினைகள் பற்றியும், கடன்வசதி, செயற்பாட்டு முதல் பிரச்சினைகள் பற்றியும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர்களும் கலந்து கொண்ட இக்கூட்ட முடிவில் சமாச உப - தலைவர் சி. குமாரவேல் நன்றியுரை வழங்கினார்.

இதற்கிடையில் கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கான சம்பளத்திட்டம், கொழும்பு கூட்டுறவு வேலையாளர்கள் ஆணைக்குழுத் தலைவரால் கூட்டுறவுத்துறை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டு விட்டதாக கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஜீ. ஹெட்டியாராச்சி யாழ். ப. நோ. கூ. சங்கத் தலைவருக்கு அறிவித்துள்ளார். (இ)

## வைத்திய அதிகாரி இருந்தும் சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு

தென்மராட்சி, ஒக். 1

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு வைத்திய அதிகாரிகள் வந்துள்ளபோதிலும் திடீர் மரணங்கள் ஏற்படுகின்ற வேளையில் சடலங்களை யாழ். போதனாவைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டிய அவல நிலை தொடர்கிறது.

25ஆம் 26ஆம் 27ஆம் திகதிகளில் மூன்று திடீர் மரணங்கள் சாவகச்சேரிப் பகுதியில் இடம் பெற்ற போதிலும் மூன்று சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டன.

இதனால் பெருமளவு பணம் தனியார் வாகனங்களுக்குக் கொடுக்க வேண்டியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (இ-117)


## வாழ்த்துகின்றோம்

ஆசிரியர் சேவையில் 01 - 10 - 1997 அன்று முப்பத்தைந்து ஆண்டுகள் நிறைவு காணும்

**திருமதி வி. கந்தையா**

S. L. T. S. - 2 - I

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

எமது பாடசாலையில் விஞ்ஞானக் கல்வியைச் சிறப்புற மாணவர்களுக்கு கற்பிக்கும் அவர் பணி தொடரட்டும்!

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்.

யா / மல்லாகம் மகா வித்தியாலயம்.

(50194)



உ

யாழ்ப்பாணம் வண்ணை

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

**02 - 10 - 97 - 16 - 10 - 97**

2-10-97 வியாழன் கொடியேற்றம்
10-10-97 வெள்ளி தேர் உற்சவம்
11-10-97 சனி தீர்த்தோற்சவம்
15-10-97 புதன் சுமங்கலி தீபபூசை

குறிப்பு: சுமங்கலி தீப பூசையில் கலந்து கொள்பவர்கள் காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

தேவஸ்தான
ஆதீன மகாசபை.

(50201)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 04 — 1929

மறைவு: 01 — 09 — 1997

**திருமதி நேசரத்தினம் குமாரசாமி**

**(மணி)**

திதி: 01 - 10 - 1997

அன்புத் தாயின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திக்கின்றோம்!

K. ரவீந்திரன்
(மகன்)

680, பூநாறி மரத்தடி,
கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (50206)


## தரமற்ற அரிசி

தென்மராட்சி, ஒக். 1

கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக் கடைகளில் வெள்ளைப்பச்சை, கோறா அரிசி ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இக் கிளைக் கடைகளில் தரமற்ற குத்தரிசி 26 ரூபா விலையில் விற்கப்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (இ-117)

## மீன் விலை உயர்வு

செம்பியன்பற்று, ஒக். 1

வடமராட்சி கிழக்குப்பகுதியில் உள்ள நாகர் கோயில் சந்தையில் மீன் விலை அதிகரித்துள்ளது.

முன்னர் 15 ரூபா விற்ற ஒரு கிலோ சூடை மீன் தற்போது 40 ரூபாவில் இருந்து 50 ரூபா வரை விற்கப்படுகிறது. இதேபோல் 80 ரூபா விற்ற ஒரு கிலோ சின்னட்டி மீன் தற்போது 120 ரூபாவில் இருந்து 130 ரூபா வரை விலை போகிறது. (இ-36)

## முதியோர் வாரம்

வலிகாமம் மேற்கு, சங்கானை பிரதேச செயலர் பிரிவில் சர்வதேச சிறுவர் வாரம், சர்வதேச் முதியோர் வாரம் ஆகியவற்றை விரிவாகக் கொண்டாடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-12)

## திருத்தம்

24 - 09 - 97 ஆம் திகதிய உதயன் நான்காம் பக்கத்தில் வெளியான —

சுன்னாகம் இளைப்பாறிய ஆசிரியர் அமரர் துரையப்பா நாகநாதனின் 45 ஆம் நாள் நினைவஞ்சலி விளம்பரத்தில் —

உதிர்வு: 11 - 08 - 1977 என்று தவறுதலாக அச்சாகி விட்டது. 11 - 08 - 1997 என்று திருத்தி வாசிக்கவும்.

## சனசமூக நிலையங்களை புனரமைக்க நடவடிக்கை

வலிகாமம் தெற்கு, ஒக். 1

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சனசமூக நிலையங்கள் மக்கள் மீளக்குடியமர்வின் பின்னர் துரிதமாக புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இராணுவ நடவடிக்கைகளினால் இப்பகுதியில் உள்ள பல சனசமூக நிலையங்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

அவற்றைப் புனரமைப்புச் செய்வதோடு சனசமூக நிலையங்களைப் புதிதாகப் பதிவு செய்து இயங்க வைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்கண்ட தகவல்களை வலிகாமம் வடக்கு, தெற்கு பிரதேச செயலகங்களின் சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் சு. தேவச்சந்திரன் தெரிவித்தார்.

உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர் பாடசாலை கட்டடத்தில் உடுவில் மத்திய சனசமூக நிலைய உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சு. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் வலிகாமம் தெற்கு சனசமூக உத்தியோகத்தர் செல்வி ஆர். சிவயோகம், கிராம சேவையாளர் எஸ். ஆர். யேசுபாலன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் 36 பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இவற்றில் உடுவில் உப அலுவலக பிரிவில் 16 க்கு மேற்பட்ட சனசமூக நிலையங்களும், ஏழாலை பிரிவில் 16 சனசமூக நிலையங்களும், சுன்னாகம் பிரிவில் 11 சனசமூக நிலையங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்பிரதேச செயலர் பிரிவில் மேலும் சில சனசமூக நிலையங்கள் பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளன.

இராணுவ நடவடிக்கைகளினால் ஏழாலை பிரிவு சனசமூக நிலையங்களுக்குக் கூடிய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இவற்றைப் புனரமைப்புச் செய்து மறுபடியும் இயங்க வைப்பதற்கான முயற்சிகளை எடுத்து வருகின்றோம் என தேவச்சந்திரன் தனது உரையில் கூறினார். (இ-152)

## படுக்கை விரிப்புகள், துவாய்கள் நெசவு நிலையங்களில் உற்பத்தி

தென்மராட்சி, ஒக். 1

தென்மராட்சிப் பிரதேச அரசாங்க நெசவு நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் படுக்கை விரிப்புகள், துவாய்கள் இந்தப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நெசவு நிலையங்களுக்கு பிரதேச செயலகத்தினால் நூல்கள் வழங்கப்படுவதால் கைதடி மத்தி நெசவு நிலையத்தில் தினமும் 60 முதல் 75 வரையிலான துவாய்களும், மட்டுவில் வேரக்கேணி நெசவு நிலையத்தில் தினமும் பத்து படுக்கை விரிப்புக்களும், 50 துவாய்களும், மிருசுவில் விடத்தற்பளை நெசவு நிலையத்தில் 8 படுக்கை விரிப்புகளும், 25 துவாய்களும் உற்பத்தி செய்யப்படுவதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-117)

## 300 குடும்பங்களுக்கு சமையல் பாத்திரம்

### புனர்வாழ்வு நிறுவனம் வழங்கியது

யாழ்ப்பாணம், ஒக். 1

வலி. வடக்கு பிரதேச செயலர் பகுதியில் மல்லாகம் கிராமசேவையாளர் பிரிவில் மீளக்குடியமர்ந்த 270 குடும்பங்களுக்கு அத்தியாவசிய சமையற் பாத்திரங்களை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வழங்கியுள்ளது.

அப்பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள் எந்தவித உதவிகளையும் வழங்காத நிலையில் விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்து அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் இவர்களுக்கு பாய், திருவுபலகை, கத்தி, பானை, விளக்கு, பாத்திரங்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளது.

இந்தப் பொருள்கள் வழங்கும் வைபவம் வலி - வடக்கு பிரதேச செயலர் திருமதி திலகநாயகம் போல் தலைமையில் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உப தலைவர் சு. நல்லதம்பி இவ் வைபவத்தில் கலந்து கொண்டு மல்லாகம் வடக்கு கிராமசேவையாளர் பிரிவில் 219 குடும்பங்களுக்கும், மல்லாகம் மத்தி கிராம சேவையாளர் பிரிவில் 51 குடும்பங்களுக்கும் இந்தப் பொருள்களை வழங்கினார். (இ-3)

## தையல்பயிற்சி வகுப்பு

மல்லாகம், ஒக். 1

நல்லூர் பிரதேச செயலகத்தினால்தையல்பயிற்சி வகுப்பு ஒன்று நடத்தப்படவுள்ளது.

மேற்படி பயிற்சி வகுப்புகளில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தங்கள் பகுதி கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (இ-86)

## வலி. தெற்கு செயலர் பிரிவில் முதியோர் தின நிகழ்வுகள்

வலிகாமம் தெற்கு, ஒக். 1

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் இன்று முதல் 8 ஆம்திகதி வரை சர்வதேச சிறுவர் தினம், சர்வதேச முதியோர் தினம் ஆகியவற்றை கொண்டாடுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இத்தினத்தை யொட்டிய கட்டுரை, கவிதை, ஓவியம் சார்பான போட்டிகளை வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே இவ்வாரத்தில் நடத்த பிரதேச செயலகம் முன்வந்துள்ளது.

சர்வதேச சிறுவர் தினத்தை யொட்டி உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தலைமையில் 7 ஆம் திகதி பிற்பகல் 2. 30 மணிக்கு உடுவில் இராமநாதன் கல்லூரியில் விழா ஒன்றை நடத்தவும் ஏற்பாடாகியுள்ளது.

இவ் விழாவில் மேற்படி போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்கான பரிசில்கள் வழங்கப்படும். சிறப்புவிருந்தினர்களுடைய உரைகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. (இ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

## இரத்தம் பரிசோதிக்க ஒரு நுண்கருவியாளர் மட்டுமே!

சண்டிலிப்பாய். ஒக். 1

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

தினமும் வெளிநோயாளர் பிரிவில் 400 பேருக்கு மேல் சிகிச்சை பெறுகின்றனர்.

வார்ட்டுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

இவ் வைத்தியசாலையில் காய்ச்சல் நோயாளர்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்வதற்கு ஒரே ஒரு நுண்கருவியாளர் மட்டுமே கடமையாற்றிவருகின்றார்.

வட்டுக்கோட்டை கிராமிய அரசினர் வைத்தியசாலை, தொல்புரம் அரசினர் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை, உடுவில் அரசினர் வைத்தியசாலை, மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றில் காய்ச்சல் நோயாளர்களிலிருந்து எடுக்கப்படும் இரத்தமும் இவ்வைத்தியசாலைக்கே பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றது.

ஒரு நாளைக்கு சுமார் 100 இரத்தப் பரிசோதனைகளை மட்டுமே ஒரு நுண்கருவியாளரினால் மேற்கொள்ள முடியுமாதலால் இங்கு கொண்டுவரப்படும் சகல இரத்தங்களையும் தனி ஒருவரினால் பரிசோதிக்க முடியாத நிலை ஏற்பட்டு வருவதாக அறியப்படுகின்றது. (இ-135)

## கொழும்புத்துறை கிழக்குக்கு மின்சாரம்

கொழும்புத்துறை, ஒக். 1

கொழும்புத்துறை கிழக்குப் பகுதிக்கு யாழ். மாவட்ட மின் அத்தியட்சகர் திணைக்களத்தினால் கடந்த திங்கட்கிழமை மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. (இ-30)

## விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஒக். 1

கோப்பாயைச் சேர்ந்த தங்கராணி சிவனேசராசா என்பவரது வீட்டுக்குள் ஓடு பிரித்து திருடுவதற்காக நுழைந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் உரும்பிராயைச் சேர்ந்த ரவீந்திரன் என்பவர் கோப்பாய் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். நீதிபதி அவரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (இ-9)

## புற்பாய் உற்பத்தி பாதிப்பு

தென்மராட்சி. ஒக். 1

சம்புப் புல்லுப் பாய் உற்பத்தி செய்வதற்கான புல் வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளதால் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் வேலை இழந்துள்ளனர்செம்பியன்பற்றுத் தொடக்கம் வரணிவரையிலான நீரேரிப் பகுதியிலும் புத்தூர் வாதரவத்தை குளங்களிலும் இந்தப்புல் வளர்கிக்து. இவற்றினை வெட்டிக் காயவைத்து விற்பனை செய்து வந்தோரே தற்பொழுது தொழில் இழந்துள்ளனர். (இ-117)

## உரவகைகள் விநியோகம்

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிச் சங்கங்களின் சமாசம் மாகோ கப்பல் மூலம் 350 மெற்றிக் தொன் உரவகைகளைக் கொண்டு வந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகித்து வருகிறது.

அமோனியம் சல்பேற், ரீ. டி. எம், வீ - 1 கலவை என்பன யூரியா அடிப்படைக் கலவைகள் என்றும்—

இவை அதிகவிளைச்சலைத் தரக்கூடியவை என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

பல காலத்திற்குப் பின்பு யூரியா அடிப்படை உரக் கலவைகள் யாழ். மாவட்டத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## கருத்தரங்கு

சாரணீய ஆசிரியைகளுக்கான அறிமுகப் பயிற்சி அவத்தை - 1 கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் சாரணீய குருளையர் பிரிவு பயிற்சித் தலைவி திருமதி ஆர். ஜே. பி. சேவியர் தலைமையில் நடைபெற்றது.

இப் பயிற்சி வகுப்பில் தென்மராட்சி, பளை ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த சாரணீய ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

பயிற்சி வகுப்பில் சாரணர் பிரிவு பயிற்சித் தலைவரும் சாரண உத்தியோகத்தருமான (வலயம் 1) மா. புவனேந்திரன் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார்.

# கிளினிக்குகளில் 2வாரங்களுக்குரிய மருந்தே தொடர்ந்து விநியோகம்

## நோயாளிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ். போதனா வைத்தியசாலை கிளினிக்குகளில் இரு வாரங்களுக்குரிய மருந்துகள் வழங்குவதால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில் நீரிழிவு, இருதய நோயாளர்களுக்கு கிளினிக்குகளில் ஒரு மாதத்துக்கு தேவையான மருந்து வகைகள் வழங்கப்பட்டு வந்தன.

ஆனால் கடந்த சில மாதங்களாக இவர்களுக்கு 14 நாள்களுக்கு போதுமான மருந்துகளே வழங்கப்படுகின்றன.

இதனால் அந்த மருந்து முடிந்தவுடன் 14 நாள்களில் மருந்து பெறுவதற்கு மட்டுமே அந்த நோயாளர்கள் கிளினிக்குக்கு போகவேண்டியுள்ளது.

இது விடயத்தில் ஆஸ்பத்திரி நிர்வாகம் அக்கறை எடுத்து நோயாளர்களுக்கு உதவ மாட்டாதா? என்று அவர்கள் கேட்கின்றனர். [இ-3)

## வாழைப்பழம் விலை அதிகரிப்பு

நெல்லியடி, ஒக். 1

வடமராட்சிப் பகுதியில் வாழைப்பழத்தின் விலை சில தினங்களாக அதிகரித்துள்ளது.

மந்திகை மரக்கறிச் சந்தையில் ஒரு கிலோ வாழைப்பழம் 32 ரூபாவாக விற்கப்படுகிறது. (இ-109)

## 10 அடி நீள நாக பாம்பு

செம்பியன்பற்று, ஒக். 1

சுமார் பத்து அடி நீளமான நாகபாம்பு ஒன்று வடமராட்சிப் பகுதியில் உள்ள வீதியில் அடித்துக் கொல்லப்பட்டது.

காலை நேரம் வீடு ஒன்றினுள் இது நுழைய முற்பட்டபோது அங்கிருந்தவர்களால் அடித்துக் கொல்லப்பட்டு வதிரிச் சந்தியில் மக்கள் பார்வைக்குப் போடப்பட்டிருந்தது. (இ-36)

# விழிவெண்படல நோய்க்கு 25 பேருக்குக் கண் சிகிச்சை

தென்மராட்சி, ஒக். 1

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட கண் சிகிச்சை முகாமில் 25பேருக்கு விழிவெண்படலத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு கண் சிகிச்சை நிபுணர்களால்கண்டு பிடிக்கப்பட்டு சத்திரசிகிச்சை செய்ய சிபார்சு செய்யப்பட்டுள்ளது. கண்பரிசோதனை செய்யப்பட்ட 298 பேரில் நூற்றுக்கு மேற்பட்டோருக்கு மூக்குக் கண்ணாடி பெறுவதற்கும் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக கழகச்செயலாளர் எம். கே. ஜீவகதாஸ் தெரிவித்தார்.

கொடிகாமம் வணிகர் மன்றம், கொடிகாமம் இளைஞர் சேவை மன்றம், கொடிகாமப் பகுதி கிராம அலுவலர்கள் ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்ட இச் சிகிச்சை முகாமில் வாய்ப்புற்று நோய், இரத்த அமுக்கம், சலரோகம் ஆகிய பரிசோதனைகளும் நடத்தப்பட்டன.

சலரோகப்பரிசோதனையில் நான்கு பேர் சலரோகத்தினால் பாதிக்கப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வைபவத்தில்மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் க. தா. சிவபாதம், தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம் பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

# இலங்கை வங்கிப் போட்டியில் தெரிவான 14 பேர் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 1

இலங்கை வங்கி தனது 1998 ஆம் ஆண்டுக்கான புது வருட வாழ்த்து மடலில் சித்திரத்தை தெரிவுசெய்ய அகில இலங்கை ரீதியாக நடத்திய போட்டியில் வடமாகாண ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 15 மாணவர்களில் 14 மாணவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

அவர்களின் விபரங்கள் வருமாறு:

எஸ். கலைவாணி — சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை (தேசிய ரீதியாக 9 ஆம் இடத்தைப் பெற்றவர்)

என். ஜீவன் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி (இரண்டு பரிசுகளைப் பெற்றுள்ளார்).

ரி. சுதர்ஷன் — சாவகச்சேரி இந்துக்கல்லூரி. வை. ஆர். இராஜேஸ்வரன் — புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.

வி. காந்தரூபன் — மானிப்பாய் இந்துக்கல்லூரி

ச. றூபா சரவணபவான் — யாழ். இந்துமகளிர் கல்லூரி

ஏ. சுதர்சினி — மானிப்பாய் மகளிர் கல்லூரி.

ரி. விதுலா — மானிப்பாய் மகளிர் கல்லூரி.

எல். வீரசிங்கம் — கரணவாய் மகாவித்தியாலயம்.

சி. விஜந்தன் — யூனியன் கல்லூரி.

பி. அன்ரன் ஜேசுதாசன் — நெடுந்தீவு மகாவித்தியாலயம்.

பி. அன்ரன் அமலதாஸ் — நெடுந்தீவு மகாவித்தியாலயம்.

எஸ். ஜெயபாலன் — நெடுந்தீவு மகாவித்தியாலயம்.

சர்வதேச சிறுவர் தினமான இன்று கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கும் விழாவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் இவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

இதில் பங்குபற்றும் மாணவர்களுக்கு விமான [illegible] பிரயாண வசதிகளையும் தங்குமிட வசதிகளையும் இலங்கை வங்கி வழங்குகிறது.

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஒக். 1

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் கோயில் வருடாந்த மஹோற்சவம்நாளைவியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்

எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 11 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 12 ஆம் திகதி திருக்கல்யாணமும், பூங்காவன உற்சவமும், 13 ஆம் திகதி ஆஞ்சநேயர் பொங்கலும் இடம் பெறும். (இ-30)

★ ★ ★

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் நவராத்திரி விழா நாளை 2ஆம் திகதி வியாழக்கிழமை முதல் நடைபெறவுள்ளது. தினமும் மாலை 4. 30 மணி முதல் அபிராமியந்தாதி பாராயணம், பஜனை, விசேட பூசை, அபிஷேகம் என்பன நடைபெறும். விஜயதசமி அன்று [illegible] ஏடு தொடக்கலும், பிற்பகல் 4 மணிக்கு மானம்பு உற்சவமும் இடம் பெறும். (ஐ135)

# இந்து சமய நெறிகளை பின்பற்றி வாழுங்கள்

## மணி விழாவில் ஆணையாளர்

நல்லூர், ஒக் 1

இந்து மதத்தின் பாரம்பரியத்தையும் தமிழர்களின் கலாசாரத்தையும் பாதுகாக்க தமிழர்களாகிய நாம் எம்மால் முடிந்ததைச்செய்ய வேண்டும். இதனைத் தமது விருப்பமாக மட்டும் கொள்ளாமல் எமக்குரிய வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடித்து வாழ்பவர் வரதராசா.

சமய சமூக சேவையாளரும் பத்திரிகையாளரும் சமாதான நீதிபதியுமான சி. சி. வரதராசாவின் அறுபதாவது அகவை விழாவில் பாராட்டுரை வழங்கிய யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற இந்த விழாவுக்கு ஓய்வுபெற்ற அதிபர் கா. கணேசதாசன் தலைமை வகித்தார்.

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை, உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளை, யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் என்பன இணைந்து நடத்திய மேற்படி விழாவில் ஆணையாளர் மேலும் தெரிவித்ததாவது:

முதலில் வணக்கம் கூறி வரவேற்பது தமிழர்களுடைய பண்பு அதனை இன்றும் தன் வசப்படுத்தி சேவை என்பது சாதாரண மக்களும் செய்யக் கூடிய ஒன்று என்பதை மக்கள் முன் நிறுத்தி சமயத்துக்கும் சமூகத்துக்கும் தொண்டாற்றி வருகிறார். தாம் ஏற்கும் பணிகளைத் தமது சொந்த விடயம் போல் செயற்பட்டு நிறைவு செய்யும் அவரது உளப்பாங்கையும் அன்பு, அரவணைப்பு போன்ற சிறந்த பண்புகளையும் இன்றைய இளம் வயதினர் கடைப்பிடித்து அதன் வழி நின்று சமயத்துக்கும் சமூகத்துக்கும் தொண்டாற்ற வேண்டும் எனக் கூறினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் தனது ஆசியுரையில். —

ஏற்கும் பணிகளை இறை நம்பிக்கையுடனும் தன்னம்பிக்கையுடனும் மேற்கொள்ளும் ஒருவராக சமூகப்பணிகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு திருநீறும் சந்தனப் பொட்டுமாகப் பொலிவுடன் காணப்படும் ஒருவரை இன்று காண்பது அரிது. அப்படி ஒருவரை நாம் தினமும் காண்கிறோம் என்றால் அது வரதராசாவே எனலாம்.

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வதிவிடமாகவும் கொண்டுள்ள இவரின் சமயப் பணிகள் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் பரவியிருந்தமை அவரது சேவை உணர்வைக் காட்டுகிறது என்றார்.

விழா நாயகர் வரதராசா தனது பதில் உரையில் நாம் ஆற்ற வேண்டிய மக்கள் பணி ஏராளம். எல்லாவற்றையும் எம்மால் செய்ய இயலாதெனினும் முடிந்த அளவு மக்கள் பணிக்காக நம்மை அர்ப்பணிக்க வேண்டும். இது இறைவன் விருப்பம்என்றார்.

மில்க்வைற் அதிபர் க. கனகராசா வழங்கிய 'சமூகமணி' என்னும் பட்டம் விழாநாயகருக்குச் சூட்டப்பட்டது.

யாழ். மதுவரி உதவி ஆணையாளர் திணைக்களத்தைச் சேர்ந்த பிரதம எழுதுநர் பி. வேலுப்பிள்ளை, உலகத் தமிழர் பண்பாட்டுக் கிளைத் தலைவர் ஆ. சண்முகலிங்கம், சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் வே. கெ. தனபாலன், ஆயுள்வேத வைத்தியர் து. கனகலிங்கம் உட்படபலர் பாராட்டுரை வழங்கினார்கள். (இ-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித திரேசாள் நூற்றாண்டு விழா (1897-1997) மலர்

## அச்சுவேலி, புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் (1947-1997) பொன் விழாவும் பரிசளிப்பு விழாவும்

01-10 1997

### நூற்றாண்டுவிழாக் காணும் இயேசுவின் சிறிய புஷ்பம் புனித திரேசாள்



கல்லூரியின் பாதுகாவலியாக விளங்கும் இயேசுவின் சிறிய புஷ்பம் புனித திரேசாள் ரோஜா மலர்களைப் பொழியட்டும்!

யேசுவின் சிறிய புஷ்பம் என அழைக்கப்படும் குழந்தை இயேசுவின் திரேசம்மாள் விண்ணக வாழ்வை எட்டிய நூற்றாண்டை உலகமெங்கும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறது.

புனித திரேசாள் 1873 ஆம் ஆண்டு தை மாதம் 2 ஆம் திகதி பிரான்ஸில், அல்கனில் பிறந்தார். இவரது தந்தை மார்ட்டினும், தாய் செலினும் ஆழ்ந்த இறை பக்தி உள்ளவர்கள். சின்னத் திரேசாள் இறை உறவிலும், குடும்ப அன்பிலும் மிகவும் செல்லமாக வாழ்ந்தாள்.

தமது நான்காவது வயதில் அன்புத் தாயை இழந்த திரேசாள், தமது மூத்த சகோதரிகளின் அரவணைப்பில் வளர்ந்தாள். தந்தையின் அரவணைப்பில் இன்பமாக வளர்ந்தாலும், இயேசுவின் அன்பு அவரை ஆன்மாக்களுக்காகப் பரித்தியாகம் செய்யப் பதினைந்தாவது வயதில் அழைத்தது. இங்கு ஏற்கனவே அவளின் மூத்த சகோதரிகள் இருவர் கார்மேல் மடக் கன்னிகையராக இருந்தனர். இறுதியாகத் திரேசாளும் கார்மேல் மடக் கன்னிகையாக இணைந்தாள்.

திரேசாளின் கார்மேல் மடவாழ்வு ரோஜா மலரைப் போலக் காட்சி அளித்தாலும் முட்கள் மிக நிறைந்ததாகவே விளங்கியது. குழந்தையைப் போல் கடவுளிடம் அன்பும் நம்பிக்கையும் வைத்து யாவற்றையும் பொறுமையோடு ஏற்றுக் கொள்ளுதல், எல்லாவற்றுக்கும் மேலாக அன்பு செய்தலே அவளின் குறிக்கோளாக அமைந்தது. இறைமக்கள் யாவரும் மோட்சம் சேரவேண்டுமென்று தன் வாழ்வையே அர்ப்பணித்தார்.

காச நோயினால் பீடிக்கப்பட்டு மிகவும் வேதனையுற்ற திரேசாள் 1897 செப்ரெம்பர் 30 இல் '' கடவுளே உம்மை நான் நேசிக்கின்றேன் '' என இறுதிமொழி கூறி விண்ணகம் சென்றாள்.

தாம் விண்ணகம் சென்றபின், தன்னிடம் வரம் கேட்பவர்க்கெல்லாம் வானினின்று ரோஜா மலர்களைப் பொழிவேன் என்றவாக்கு நிறைவேறியது.

எமது பாடசாலையிலும் பாதுகாவலியாக இருந்து, எமக்கு ரோஜா மலர்களைப் பொழியும் திரேசாள் தனது நூற்றாண்டு விழாவின் அன்புப் பரிசாக அனைவருக்கும் ரோஜா மலர்களை நிறைவாகப் பொழிந்திட திரேசாளூடாக இறைவனை இறைஞ்சுவோம்.

சகோ. எம். எத்தல்லிவா
அதிபர்.

### யாழ். ஆயரின் ஆசிச்செய்தி

யாழ். புனித திரேசாள் மகளிர் கல்லூரி தனது பொன் விழாவைக் கொண்டாடுவதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

நாட்டின் பாதகமான சூழ்நிலையின் மத்தியிலும கல்வியையும், கிறிஸ்தவ விழுமியங்களையும் தளராத மனத்துடன் வழங்கிப் பாடசாலை வளர்ச்சியிலே அக்கறைகொண்டு உழைத்த அனைவரையும் பாராட்டுகின்றேன்.

சென்ற ஐம்பது ஆண்டுகளாக இப்பகுதியின் கல்விக்கு நிலைக்களனாகவும் எமது இளம் செல்வங்களின் ஆற்றல்களைத் திரட்டி நெறிப்படுத்தும் இடமாகவும் இக்கல்லூரி அமைந்திருந்தமை பற்றி பெருமையடைகின்றேன். இந்தப் . பாடசாலை சகல துறைகளிலும் மேன்மேலும் சிறந்து பல நூற்றாண்டுகள் வாழ்ந்தோங்கிப் புகழ் பெற மனமார வாழ்த்துகின்றேன்.

✠ தோமஸ் சவுந்தரநாயகம்

### கல்விப் பணிப்பாளர் வாழ்த்து

கிறிஸ்தவர்களால் ஆரம்பிக்கப்பட்டு கிறிஸ்தவப் பெயரைக் கொண்டிருந்தாலும், ஏடெடுத்த எந்தச் சமயத்தவரையும் ஏற்றி வைத்து சமத்துவம் காட்டிய பாடசாலையாக இக்கல்லூரி திகழ்கின்றது என்றால் மிகையாகாது

பேரும் புகழும் பேச்சால் வருவதல்ல; பெறுபேற்றால் வருவது. அப்பெறுபேற்றாற் பேரும் புகழும் பெற்ற இக்கல்லூரி இன்று பொன்விழாக் கொண்டாடுவதால் அதன் புகழ் மேலும் ஒரு படி உயர்கின்றது.

இக்கல்லூரியின் இன்றைய பொன்விழாவின் பெருமை பன்மடங்காகி அடுத்து வரும் பவளவிழாவில் மேலும் புகழ் ஓங்க ஆசிக்கின்றேன்.

சி. சிவராசா
கல்விப் பணிப்பாளர் வலயம் II

### The Provincial Superior's Message...




Every Jubilee celebration is a moment for recapitulation. A unique occasion for thanksgiving and to magnify the Lord for what He has done The Fiftieth Anniversary of St Therese's Girls College, Atchuvely is no doubt an event for celebration, praise and thanks to God for His blessings. It is also an event to express tangibly and remember fondly all the sisters, the Staff and the collaboretors down the ages since 1946.

The providential care of God was manifested through the generous benefactor the late Chevalier Sir Chittampalam Abraham Gardiner who so generously gifted this school building of St. Therese's Girls' College, Atchuvely and the land on which it stands today. We are ever so grateful to the sisters of the Holy Family Congregation who pioneered this institution and handed it over to our Apostolic Carmel Sisters in 1947. This is the only Catholic Girls' College in the Kopay District catering to the educational needs of all the Catholic Girls at Atchuvely and its surrounding villages.

As the Golden Years turn to Diamond, may St. Therese the much loved Little Flower whose Centenary death Anniversary is celebrated this year, shower her roses of love on this school and inmates and intercede God to grant the inspiration needed to bring about the growth of a well integrated, peace - loving nation.

May God bless you.

**Sr. Maria Dilecta A. C.**
Provincial Superior,
Apostolic Carmel,
Sri Lanka.



### வரலாற்றில் நம் பாடசாலை

**1875** ஆம் ஆண்டு தம்பிமுத்துப் புலவராலும், சூசைப்பிள்ளை விதானையாராலும் அச்சுவேலி புனித சூசையப்பர் கோயிலுக்கு அருகிலே ஒரு திண்ணைப் பள்ளியாக இது ஆரம்பிக்கப்பட்டது இக்கல்விச் சாலையில் அவ்வேளை 40 ஆண் பிள்ளைகள் படித்தனர். அவர்களில் 36 பேர் கத்தோலிக்கர், மிகுதி நான்கு பேரும் சைவ மாணவர்கள்.

சுவாமி ஞானப்பிரகாசர் ஆரம்பக் கல்வியை இந்தப் பள்ளிக் கூடத்திலேயே கற்றார். அவ்வேளை அச்சுவேலி றோ.க. கலவன் பாடசாலை என்ற பெயருடன் திகழ்ந்தது.

**1946** ஆம் ஆண்டில் சேர். சிற்றம்பலம் ஆபிரகாம் காடினர் அவர்கள் ஒரு பெரிய பாடசாலை மண்டபத்தையும் விஸ்தரிக்கக் கூடியளவு காணியையும் வழங்கினார். இப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஆலயப் பிரதமகுரு ஆசி

''ஒழுக்கம் விழுப்பந் தருதலான்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்''

இக்கல்லூரியில் கல்வி பயிலுவோர்களை மேற்போந்த குறளின் வசமாக்கி விடவேண்டுமென்ற அசையா நம்பிக்கை பூண்டொழுகியவர்கள் மேன்மைக்குரிய அதிபர் அருட்சகோதரியும் ஏனைய அருட்சகோதரிகளும் மற்றும் உதவியாசிரியர்களுமாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கல்லூரியினது ஒழுங்கு, ஒழுக்கம், கட்டுப்பாடு, வித்தியாவிருத்தி மனித நேயப் பண்புகள் ஆகியனவற்றால் ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி மேலோங்க

[8 ஆம் பக்கம் பார்க்க]


### நூற்றாண்டு விழா சிறப்புற வாழ்த்துவோர்:

| | | | |
|---|---|---|---|
| சூரியா மருந்தகம்<br>பஸ் நிலையம்,<br>அச்சுவேலி. | கண்டி ஸ்ரோர்ஸ்<br>பல்பொருள் வாணிபம்,<br>சந்நிதி சாலை, அச்சுவேலி. | ப. நோ. கூ. சங்கம்<br>வலி. கிழக்கு வடபகுதி.<br>ஆவரங்கால், அச்சுவேலி. | செள். மேரிஸ் ஸ்ரோர்ஸ்<br>பல்பொருள் வாணிபம்,<br>சந்நிதி சாலை, அச்சுவேலி. |
| பானுஜா<br>வர்த்தக நிலையம்<br>பல்பொருள் வாணிபம்,<br>நவீன சந்தை, அச்சுவேலி, | சாயி ஸ்ருடியோ<br>அன் வீடியோ<br>பஸ் நிலையம், அச்சுவேலி. | ப.தெ. வ. அ. கூ. சங்கம்<br>அச்சுவேலி. | வீடியோ கலாமினி<br>அச்சுவேலி.<br>(விளம்பர. இல சி 146) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போய் தகவல் தெரிந்த 176 பேர்

குடாநாட்டில் காணாமற் போனதாக முறைப்பாடு செய்யப்பட்டவர்களில் தகவல் தெரிந்த 176 பேர் பற்றிய விவரங்கள் வருமாறு:

★ அலோசியஸ் லக்ஸ்மன்— முதலாம்குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

★ அமிர்தலிங்கம் அப்பாக்குட்டி — தவசிகுளம், கொடிகாமம்.

★ அமிர்தநந்தன் அசோக் —கைதடி மத்தி, கைதடி.

★ ஆனந்தராசா நல்லதம்பி—மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

★ அன்ரனி ஜுன் பாக்கியநாதன்—மூன்றாம் குறுக்குத் தெரு, பாசையூர்.

★ அருள் நந்தன் உதயகுமார்—34, மூன்றாம் குறுக் தெரு, அராலி.

★ ஆறுமுகம் ரவி— அரியாலை.

★ அருணாசலம் அருணகிரிநாதன்—மறவன்புலோ, சாவகச்சேரி.

★ அருந்தவராஜா பாலசுப்பிரமணியம்—நவாலி வடக்கு.

★ சுகுமார் கிருஸ்ணன்— பவர் ஹவுஸ் குவாட்டர்ஸ், சுன்னாகம்.

★ ஏ. மகேந்திரன் நியூட் ஜே. ஸ்ரீதரன்—10/A, கண்டி வீதி, குருநகர்.

★ பாலசுப்பிரமணியம் ஜெகதீஸ்வரன்—நவாலி வடக்கு.

★ பாலசுந்தரம் பிரபாகரன்— 428, பெரிய அரசடி, சாவகச்சேரி.

★ பாலசுந்தரம் சற்குணராசா—33/1, அரியாலை வடக்கு.

★ கனிஸ்ரஸ்—23, 3 ஆம் குறுக்கு வீதி, குருநகர்,

★ டி. ஜீவதயாபரன்— மறவன்புலோ, சாவகச்சேரி.

★ ஈ. நிக்ஸன் ஜிராட்— பிள்ளையார் கோயிலடி, நெடுங்குளம்.

★ இளங்கோ சபாநாயகம் —சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

★ ஈ. தயாபரன்—சப்பச்சிமாவடி, சாவகச்சேரி.

★ எவ்.எக்ஸ்.றோஷான்— 46, சுவாமியார் வீதி, யாழ்.

★ ஞானசேகரம் பத்மரூபன் — மீசாலை,

★ குணரட்ணராஜா செல்வேந்திரன் — செந்தூரன், பேக்கரி வீதி, உரும்பிராய் மேற்கு,

★ ஹேமச்சந்திரா அரியரட்ணம் — மானிப்பாய்வீதி, உடுவில், சுன்னாகம்

★ ஐங்கரன் மன்மதராஜா —கைதடி,

★ ஜசிந்தவராணி தியாகராஜா — 160, கண்டி வீதி, அரியாலை.

★ ஜீவராணி யோகராஜா — கொழும்புத்துறை,

★ ஜேசுதாஸன் மரியநாயகம் — உசன். மிருசுவில்,

★ ஜோன் ஜெயரட்ணம்— கரணவாய் மத்தி,

★ கபிலேஸ் நவரட்ணம் — கோப்பாய் வடக்கு,

★ கதிரமலை ரவீந்திரன் — கைதடி,

★ கஜேந்திரன் தேவராஜா — குணரட்ணம் வீதி, அரியாலை,

★ கலைராஜா நேசராஜா — தொட்டிலடி,சங்கானை,

★ கல்யாணி சுதர்சன் — நீர்வேலி வடக்கு,

★ கனகசபை யோகலிங்கம் — அச்செழு, நீர்வேலி,

★ கணபதி குமாரவேல் — கொடிகாமம்,

★ கந்தன் விஜயன் — வி. எச், லேன், கோப்பாய் தெற்கு,

★ கந்தப்பு மகேந்திரன் — மீசாலை மேற்கு,

★ கந்தசாமி சிவகுமார்— 54/5, குறோசெற் லேன், நல்லூர்வீதி,

★ கந்தையா சிவதாஸன் —ஆனைக்கோட்டை,

★ கந்தையா ஸ்ரீதரன் — தெல்லிப்பழை.

★ கந்தையா தியாகராஜா 17/15,பண்டாரக்குளம் வீதி, நல்லூர்,

★ கண்ணன் அருள்பிரகாசம் — மட்டுவில் வடக்கு,

★ கண்ணதாசன் அலியஸ் தயாளன் — கைதடி.

★ கந்தன் இந்திரன் — உயரப்புலம், இளவாலை

★ கந்தையா பிரபாகரன் — கைதடி.

★ கார்த்திகேசு விஜயன்— செருக்கற்புலம், பண்டத்தரிப்பு.

★ கிருஸ்ணகுமார் வேலன் — சரசாலை மத்தி, சாவகச்சேரி.

★ கிருஸ்ணன் சந்திரகுமார் — சென்றல் லைப்ரறி, சரசாலை.

★ குமாரசுவாமி சந்திரகுமார் — கொக்குவில்.

★ கே. நேசகுமார்— கோண்டாவில் கிழக்கு.

★ கே. பத்மநாதன்— இயற்றாலை.

★ கே. சண்முகலிங்கம்— கைதடி.

★ மகேந்திரன் ரவீந்திரன் — ஆனைக்கோட்டை.

★ மகேஸ்வரன் மாணிக்கம் — கரவெட்டி மேற்கு.

★ மாரிமுத்து செல்வராஜா — நவாலி கிழக்கு.

★ மார்க்கண்டு ரங்கநாதன் — சாவகச்சேரி.

★ மீனாட்சி தவராஜா— அரியாலை.

★ தணிகாசலம் சுதர்ஜினி — தாவடிச்சந்தி, கோண்டாவில்.

★ நிறஞ்சலாதேவி அருளப்பன் — 75, பி. எஸ். லேன், மூர் வீதி, யாழ்,

★ ரி. மோகன்ராஜா— தெல்லிப்பழை

★ வி. முத்துலிங்கம்— 210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

★ மயில்வாகனம் மதிகரன் — அரியாலை.

★ எம். மதிஹரன் — 75, பொன்னம்பலம் வீதி, அரியாலை.

★ நடராஜ ஜோதிஹரன்தி— மட்டுவில் தெற்கு.

★ நடராஜா நகுலேஸ்வரன் — மீசாலை கிழக்கு.

★ நடராஜா ரவீந்திரகுமார் — இணுவில் தெற்கு.

★ நடராசா மதுரகரன் — நாவற்காடு, வரணி.

★ நடராசா சிவகுமார் — — சுதுமலைதெற்கு, ஆனைக்கோட்டை.

★ நாகமுத்து பிரபாகரன் — தனங்களப்பு.

★ நல்லதம்பி விக்னேஸ்வரன் — மில்க்போட், திருநெல்வேலி.

★ நல்லையா தேவராணி — டச்சுவீதி, கோப்பாய்.

★ நாதன் தனராசலிங்கம் — மறவன்புலோ,

★ என். அருணபாலன் — 76, பி. ஏ. லேன், சோனகர் தெரு.

★ என். இந்திரகுமார் — நவாலிவடக்கு, மானிப்பாய்.

★ என். மதுரசேகரன் — நாவற்குழி.

★ என். பிரபாகரன் — கோப்பாய் வடக்கு, மானிப்பாய்.

★ என். தேவராணி — யாழ். மாநகரசபை.

★ பரம்சோதி சகேஸ்வரன் — திருநெல்வேலி.

★ பரமேஸ்வரன் சண்முகம் — மட்டுவில் வடக்கு.

★ பசுபதி தயானந்தன் — செம்பியன்பற்று வடக்கு.

★ பத்மரூபன் ஞானசேகரம் = அரியாலை தெற்கு, மீசாலை.

★ பொன்னையா கிறிஸ்ரோபர் — மந்துவில் மேற்கு, கொடிகாமம்.

★ பூபாலசிங்கம் குணசேகரம் — தச்சன்தோப்பு, நாவற்குழி.

★ பூபாலசிங்கம் விஜயகரன் — உரும்பிராய் மேற்கு.

★ பிரபாகரன் நாகமுத்து — தனங்களப்பு.

★ பிறேமதாஸன் கந்தசாமி — கரம்பைக்குறிச்சி, வரணி.

★ பிறேமதாஸன் கந்தசாமி — வரணி.

★ புஸ்பராணி ரமணன் — இயற்றாலை.

★ பி. தயானந்தன்— செம்பியன்பற்று.

★ ராஜதுரை ஜெயபிரகாஸ் — பரதன்மடம் லேன், நீர்வேலி.

★ ராஜா செந்தில்குமார் — கந்தர்மடம்.

★ ராஜவினோதன் ராஜரட்ணம் — 137, டச்சுவீதி, உடுவில்.

★ ராஜேந்திரன் ராஜேஸ்வரன் — 16/3, சீனியர்லேன், கலட்டி.

★ ராஜ் தனபாலசிங்கம்— 24, பழம் றோட், கந்தர்மடம்.

★ இராமநாதபிள்ளை கண்ணதாசன் — நாவற்குழி.

★ ரமேஸ்கரன் செல்லத்துரை — வரணி.

★ இராசலிங்கம். சிவகாந்தன் — மட்டுவில் வடக்கு.

★ இராசமனோகரன் தயாபரன் — ரயில்வே ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

★ இராசரட்ணம் ரவீந்திரராஜா — ஊரெழு மேற்கு.

★ இரத்தினன் ஜெயராசா — கண்டி வீதி, சாவகச்சேரி.

★ ரட்ணம் சந்திரோதயன் — கைதடி.

★ ரட்ணம் குகேந்திரன்— 49 ஏ, நாகேந்திரபுரம்.

★ ரட்ணம் செல்வகுமார் — தச்சன்தோப்பு, கைதடி.

★ ரவீந்திரன் கதிரமலை— நாவற்குழி தெற்கு, கைதடி.

★ சபேசன் செல்வரட்ணம் — அச்சுவேலி வடக்கு, நீர்வேலி.

★ சாமுவேல் ஐயாத்துரை — கோப்பாய் வடக்கு.

★ சதாசிவம் ரமேஸ் — சரஸ்வதி வீதி, சாவகச்சேரி.

★ சத்தியதாசன் விநாசித்தம்பி — மீசாலை கிழக்கு.

★ சற்குணராசா பழனி — காரைநகர்.

★ சத்தியகுமார் காசிப்பிள்ளை — 26, கலைமகள் வீதி, அரியாலை.

★ செல்லப்பா சிவனேசன் — மட்டுவில் வடக்கு.

★ செல்லையா கந்தசாமி — ஆனைக்கோட்டை.

★ செல்லையா சசிகுமார்— ராஜசிங்கம் வீதி, திருநகர், யாழ்ப்பாணம்.

★ செல்வராஜா சிவகிருஸ்ணன் — இயற்றாலை.

★ செந்தமிழ்ச்செல்வன் பழனி — மூளாய் தெற்கு. சுழிபுரம்.

★ சண்முகம் பரமேஸ்வரன் — மட்டுவில் வடக்கு

★ சண்முகராஜா கெங்காதரன்— மட்டுவில் தெற்கு.

★ சண்முகராஜா பிள்ளையன் — மட்டுவில் வடக்கு.

★ சிங்கமணி சுகந்தினி — கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

★ சிங்காரவேல் யோகேந்திரன் — ஆனைக்கோட்டை.

★ சின்னத்தம்பி ஜெயந்திரன் குமாரநகர், கைதடி மத்தி.

★ சின்னத்தம்பி லக்ஸ்மிகாந்தன் — வரணி, அரியாலை.

★ சின்னத்கம்பி முகுந்தன் — சுழிபுரம் மேற்கு.

★ சின்னத்தம்பி பிள்ளைநாயகன் — கொடிகாமம்.

★ சின்னத்தம்பி சுந்தரமூர்த்தி — இயற்றாலை, வரணி.

★ சின்னத்தம்பி திலகேஸ்வரன் — மந்துவில் வடக்கு. கொடிகாமம்.

★ சின்னத்தம்பி சயந்தன் — சுழிபுரம் மேற்கு.

★ சின்னத்தம்பி திலீபன்— ஆனைக்கோட்டை.

★ சிவகுருநாதன் அருட்செல்வம் — கப்பூது, வடமராட்சி.

★ சிவகுமார் முனியாண்டி — மீசாலை கிழக்கு.

★ சிவலிங்கம் ரமேஸ்வரன் — இடைக்குறிச்சி, வரணி.

★ சிவானந்தன் ரமணன் — மீசாலை கிழக்கு.

★ சிவலிங்கம் சசிகரன் — 637/24, மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம்.

★ சிவராஜன் சிவபாலன்— குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

★ சிவசுப்பிரமணியம் முகுந்தன் — சாவகச்சேரி.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## புனித திரேசாள் நூற்றாண்டு விழா மலர்

தொடர்ச்சி

### ஆலயப் பிரதம...

[ஏழாம் பக்கத் தொடர்]

எல்லாம் வல்ல சர்வ ஜீவ தயாபரனாம் இறைவனின் பாதக் கமலங்களைப் பிரார்த்தித்து மனப்பூர்வமாக ஆசீர்வதிக்கிறேன்.

மேன்மைக்குரிய காடினர் சிற்றம்பலம் அவர்கள் பிரதான மண்டபத்தையும் காணியையும் அன்பளிப்புச் செய்தமையை இப் பொன்விழாவில் நினைவு கூருவ தோடமையாது எல்லோரின் இதயத்திலும் இத்தகைய சீலரைப்போல் ஏனையோரும் பாடசாலை முன்னேற்றம் கருதித் தானம் செய்தல் வேண்டுமாய் பசுபதியாம் இறைவனைப் பிரார்த்தித்து எல்லோரையும் திரிகரண சுத்தியோடு மனப்பூர்வமாக ஆசீர்வதிக்கின்றேன்.

இறையருள் பெருக!

சுபமஸ்து

சிவஸ்ரீ

கு. வை.விருத்தகிரீஸ்வரக்குருக்கள்

(பாலபண்டிதர்)

பிரதம குருக்கள், அச்சுவேலி உலவிக்குளம் கரைச் சித்தி விநாயகர் தேவஸ்தானம். குருக்கள் வளவு, அச்சுவேலி.

### கல்வித் தேவதை புனித திரேசாள்

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் வரலாற்றில் ஐம்பதாண்டுகள் கடந்துவிட்டன. கால ஓட்டத்தில் இது சிறிய காலப் பகுதியாயினும், இக் கல்லூரியின் வரலாற்றில் இது போற்றுதற்குரிய காலப்பகுதியாகும்.

1947 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரிய சேவையைச் சார்ந்த அன்பு, கருணை, சேவை நோக்கம் கொண்ட கன்னியாஸ்திரிகளால் நிர்வகிக்கப்பட்டுவரும் இந்தக் கல்லூரி, நல்லறிவு, நற்பண்புகள், நன்னடத்தை மிக்க மாணவிகளை உருவாக்கியுள்ளது.

இந்தக் கல்லூரியின் வரலாற்றில் பல சோதனைமிக்க காலங்கள் ஏற்பட்ட போதிலும், இது தனது தனித்துவத்தை இழக்காது, தளர்வில்லாத கல்வியை வழங்கி வந்துள்ளது. தன்னை உருக்கிப் பிறருக்கு ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்திக்கு நிகரான, உள்ளத்தால் உயர்ந்த ஆசிரியர்கள் பலர் இக் கல்லூரியில் பணியாற்றுகின்றனர். இவர்களில் உன்னத சேவையால் இந்தக் கல்லூரி தனது முன்னைய பெருமையையீட்டி, அதனை நிலை நிறுத்தி, மேன்மேலும் உயர்வடைய வேண்டுமென வாயார வாழ்த்துகின்றேன்.

ஆ. ராஜேந்திரன்,

கோட்டக் கல்வி அலுவலர்,

கோப்பாய்.

### வரலாற்றில்...

(ஏழாம் பக்கத் தொடர்)

போது புனித திரேசாள் பாடசாலையாகப் பெயர் சூட்டப்பட்டு திகழ்கிறது.

**1947** இல் அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர் இப் பாடசாலையைப் பொறுப்பேற்றனர். அவ்வேளையில் 128 மாணவர்களும் 4 ஆசிரியர்களும் இருந்தனர். அருட் சகோதரி எம். அலக்கோக் (Sr. M. Alocoque)தலைமை ஆசிரியையாகப் பணியாற்றினார்.

எவ்வித வசதிகளோ, பௌதிக வளங்களோ இல்லாத காலத்தில் Sr. அலக்கொக் ஓராண்டு பணியாற்றினார். Sr. M. சமினா நான்கு ஆண்டுகள் கடமையாற்றினார். Sr. M. எவறெல்டா 1952 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 18 ஆண்டுகள் அரும்பணியாற்றினார்.

சுத்தம், ஒழுக்கம். கட்டுப்பாடு என்பவற்றோடு மாணவருக்கான சீருடையும் அறிமுகம் செய்யப்பட்டது.

புனித திரேசாள் திருவிழாவாகிய ஐப்பசித் திங்கள் 2 ஆம் திகதி முதன் முதலாக விளையாட்டுப் போட்டி ஆரம்பிக்கப்பட்டது.

**1949** ஆம் ஆண்டு மாணவர் S. S. C. பரீட்சைக்கு தோற்றிச் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றனர். மேலைத் தேச ''பான்ட்'' வாத்தியம் அறிமுகமானது.

**1961** இல் பாடசாலை அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டது.

**1981** இல் 1-C பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டு கோப்பாய் வட்டாரத்தில் ஒரேயொரு கத்தோலிக்க மகளிர் கல்லூரியாக விளங்குகிறது.

இக் கல்லூரி 'இறைவனின்' திராட்சைத் தோட்டத்திற்குப் பணிபுரியப் பலவேலையாள்களை உருவாக்கி உள்ளது

Sr. ஸ்ரனிஸ்லாஸ் மேரி அ. கா. — (1970 — 1975) (அதிபர்), Sr. சிசிலியாமேரி அ. கா. — (1976 — 1980) Rr. பிடலினா அ. கா. — (1981 — 1986) Sr. கலிஸ்ரா அ. கா. — (1987 — 1990)

**1990** ஆம் ஆண்டு போர் அனர்த்தங்களால் மாணவ ஆசிரியர் வளங்களை இழந்து பல துன்பங்களை அனுபவித்தனர்.

**1996** இல் மீண்டும் புனித திரேசாளின் [illegible] பாடசாலைக்கு வந்தோம்.

திருமதி பிலோமினா இராசேந்திரம்

(ஆரம்ப பழைய மாணவியும், நலன் விரும்பியும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ...நூலகம்

# உதயன்

## முதியோர் நாள்!

இன்று சர்வதேசமுதியோர் நாளாகும்.

பிறப்பையும், இறப்பையும் போலவே முதுமையும் மனித வாழ்க்கைச் சுற்றில் தடுக்க முடியாத, தவிர்க்கமுடியாத ஒன்று. மனிதனின் ஏழு பராயங்களில் அது இறுதியானது. முதலாவது பருவமானகுழந்தைப் பராயத்தைப் போலவே அடுத்தவரின் ஆதரவும், அன்பும்தகுந்த பராமரிப்பும் வேண்டும் காலம் அது.

குழந்தையைத் தாலாட்டி, சீராட்டி, பாராட்டி அன்பு செலுத்திப் பராமரித்துக்கொள்பவள் தாய். முதுமைப் பருவத்தில் தாயின் இடத்தை ஒருவரின் பிள்ளைகள் எடுத்துகொள்வது எங்கள் சமூகத்தின் சிறப்பான மரபு. ஒருவன் அல்லது ஒருத்தி தனது வயதான தாய் அல்லது தந்தைக்கு உரிய சகல பணிவிடைகளையும் செய்து, பராமரித்து, அன்பு செய்து, பாசத்தைப் பொழிந்து, அவர்கள் மனம் நொந்து போகாமல் பேணிக் காப்பதனைத் தலையாய கடமையாகக் கொள்வது நீண்ட பாரம்பரியம்.

ஆனால் இப்போது அந்தப் பாரம்பரியமும், பண்பும், மரபும், பழக்கமும் ஓரளவு குறைந்து கொண்டு போவது— சிறிய அளவிலேனும் குன்றி வருவது — கவலைக்குரியது.

ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் தம்மை விடச் சீராகவும், சிறப்பாகவும், மதிப்போடும், நற்பழக்கவழக்கங்களோடும், நற்புகழோடும் வாழ வேண்டும் என்ற பேராவல் கொண்டவர்கள்.

பெற்றோரை அவர்களது இறுதிக் காலத்தில் அவர்கள் மனம் வெதும்பாமல் பராமரித்துப் பணி செய்து, பரிவும் கருணையும், அன்பும் காட்டுவது பிள்ளைகளின் தவிர்க்க முடியாத, புறக்கணிக்க இயலாத பெருங் கடமையாகும்.

இதனாலேயே முதியவர்கள் — பெற்றோர்கள் — தமது பிள்ளைகளுடன் — கூடவே வாழும் வழக்கம் எமது சமூகத்தில் வேரூன்றிக் காணப்பட்டது. ஆனால் கால மாற்றமும் நாட்டு நிலைமையும் இப்போது அவர்களின் கணிசமானோர் ஒருவரை மற்றவர் பிரிந்து வேறாக வாழ வைத்துள்ளது. மிகக் குறிப்பாகப் புலம்பெயர்வு காரணமாக பிள்ளைகள் வெளிநாடுகளிலும் வயதான தாய், தந்தையார்கள் இங்குமாக வாழும் பரிதாப நிலை உருவாகி உள்ளது. அதனால் பெற்றோருக்கு அந்திமக்கிரியை செய்ய முடியாத பிள்ளைகள் பலர். கடன் கொள்ளி வைக்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையும் பெருகிக்கொண்டு வருகிறது.

தமது வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் பிள்ளைகளின் அன்பையும், பாசத்தையும் பராமரிப்பையும் பெறமுடியாமல் மூப்பும் பிணியும் வாட்டி விரக்தி அடைந்த நிலையில் மூச்சுத்தடுமாறும் முதியவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

இதனால் மேலைநாடுகளைப் போலவே இங்கும் முதியோர் இல்லங்களை அதிக எண்ணிக்கையில் நிறுவ நேரிடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. பிள்ளைகள் இருந்தும் பணவசதி கிடைத்தும் அன்பு, பரிவு, பாசம், கிடைக்காமல் அதற்காக ஏங்கி அனாதரவானவர்கள், அநாதைகள் ஆக மாறும் நிலை பல முதியவர்களுக்கு.

காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும் என்பார்கள். குருத்தோலையும் ஒரு கால் காவோலை ஆவது இயற்கையின் விதி. ஆகையால் முதியவர்களை அன்பும் பாசமும் கலந்து கருணை பராமரிக்கும் தொண்டு நிறுவனங்கள் எம் மத்தியில் உருவாக வேண்டும்.

# இம்மாத இறுதிக்குள் வாகன காப்புறுதி

### அவசியம் என்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ். மாவட்டத்தில் பாவனையில் உள்ள சகல வாகனங்களுக்கும் இம்மாத இறுதிக்குள் காப்புறுதி செய்யப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட சிவில் நிர்வாக இணைப்பதிகாரி பிரிகேடியர் திலகரத்தின கேட்டுள்ளார்.

வாகனங்களுக்குக் காப்புறுதி செய்ய காப்புறுதிக் கூட்டுஸ்தாபன யாழ். கிளையில் வசதி செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக காப்புறுதிக் கூட்டுஸ்தாபன யாழ். அலுவலகத்தில் கேட்டபோது சகல வாகனங்களுக்கும் மூன்றாம் நபர் காப்புறுதி உட்பட சகல காப்புறுதிகளையும் பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது (உ-3)

## விரிவுரைகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் முதலாம் ஆண்டு மற்றும் இணைந்த 2 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் இன்று ஆரம்பமாகவிருக்கின்றன.

இன்று காலை கைலாசபதி கலையரங்கில் நடக்கும் விசேட ஒன்று கூடல் நிகழ்வைத் தொடர்ந்து விரிவுரைகள் ஆரம்பமாகும்.

இராமநாதன் நுண்கலைப் பீடத்துக்கு 96,97கல்வியாண்டுக்கு தெரிவான மாணவர்களின் விவரங்கள் நேற்று வெளியிடப்பட்டன.

இவர்களுக்கான விரிவுரைகளும் இன்று ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. (உ-3)

## ஆசிரியர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, வரணி மகாவித்தியாலய ஆசிரியர்கள் இருவர் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் வித்தியாலய அதிபர் த. துரைராசா தலைமையில் நடைபெறும் பிரஸ்தாப பாராட்டுவிழாவில் திருமதி திலகவதி இந்திரராஜா, திரு. எஸ். சந்திரமௌலீசன் ஆகிய இருவருமே கௌரவிக்கப்பட உள்ளனர்.

பெற்றோர், பழையமாணவர், மாணவர்கள், நலன் விரும்பிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்விழாவில் சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி இலங்கையர் கணேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (அ)

## சிறுவர் தினவிழா

சர்வதேச சிறுவர் தினத்தையிட்டு தென்மராட்சி பிரதேச செயலகத்தினர் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் தினவிழா கைதடி மேற்கு பராசக்தி பாலர் பராமரிப்பு இல்லத்தில் இன்று பிற்பகல் 3-00 மணிக்கு பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரி வே. கந்தசாமி தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார்.

விழாவில் கைதடிப் பகுதி பாலர் பாடசாலை சிறுவர்களின் பாட்டு, பேச்சு, கிராமிய நடனம், குழு நடனம் போன்ற கலை நிகழ்வும் இடம்பெறும். (உ-117)

## இலைக்கஞ்சி

யாழ். நாச்சிமார் கோயில் இலவச சித்த வைத்தியசாலையில் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு இலைக்கஞ்சி வழங்கும் வைபவம் சித்த வைத்திய அதிகாரி திருமதி ஆர். யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்விற்கு தேசாபிமானியும் தொழில் அதிபருமான க. கனகராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ-30)

## காணாமற் போய்...

(எட்டாம் பக்கத் தொடர்)

★ சின்னத்தம்பி சயந்தன் — சுழிபுரம் மேற்கு.

★ சோதிலிங்கம் சுரேஸ்குமார் திருநெல்வேலி.

★ சோதிலிங்கம் சுரேஸ்குமார் — பாரதிபுரம், முருகன் வீதி, திருநெல்வேலி.

★ சௌந்தரநாயகம் எட்வின் — உயரப்புலம், ஆனைக்கோட்டை.

★ ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீகாந் — சுதுமலை தெற்கு,

★ சுப்பிரமணியம் ஜெகதீபன் — சாவகச்சேரி.

★ சுப்பிரமணியம் ரவீந்திரன் — கைதடிச்சந்தி.

★ சுதர்சன் சிவஞானம் — மட்டுவில் மேற்கு.

★ சுகிர்தன் பூபாலசிங்கம் — சரசாலை மத்தி.

★ சுரலிங்கம் சங்கரன் — மானிப்பாய்.

★ எஸ். நற்குணதேவன் — கைதடி,

★ எஸ். ரவீந்திரன் — வரணி.

★ எஸ். சண்முகலிங்கம் — 526. நாவலர் வீதி, அரியாலை

★ சசிந்திரன் — 55, கல்லூரி வீதி, வண்ணாரப்பண்ணை, கொடிகாமம்.

★ தனேஸ்கபூர் அருமைத்துரை — புத்தூர் மேற்கு

★ தங்கராஜா மதியர் — தேவாலயம் அருகாக, குப்பிளான் தெற்கு.

★ தங்கராஜா சுதர்சன் — உடுவில்.

★ தர்மேஸ்வரன் காசிப்பிள்ளை — சுதாபேக்கரிவீதி, உரும்பிராய்.

★ தவராஜா விநாசித்தம்பி — அரியாலை.

★ தவராஜா றேமன் ராஜகுலநாதன் — மந்துவில்.

★ தவராசா சுந்தரராசா — மறவன்புலோ.

★ தயாபரன் மாணிக்கம் — நாவற்குழி.

★ தெய்வநாதன் விநாசித்தம்பி — மீசாலை கிழக்கு.

★ தெய்வேந்திரன் பாஸ்கரன் — சுன்னாகம்.

★ தெய்வேந்திரன் ஆனந்தராசா — சுதுமலை தெற்கு.

★ தெய்வேந்திரன் சுப்பிரமணியம் — கோயிலாக்கண்டி, கொடிகாமம்.

★ திருநாவுக்கரசு சர்வேஸ்வரன் — தனங்களப்பு.

★ திருநாவுக்கரசு விஸ்ணுபவான் — கொடிகாமம்.

★ துரைநாயகம் ரட்ணம் — மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.

★ துரைராஜா விமல் கச்சாய், சாவகச்சேரி.

★ துரைராசா உதயகுமார் — கைதடி, நுணாவில்.

★ வானதி வில்லியம் மாணிக்கம் — புத்தூர் கிழக்கு.

★ வசந்தகுமார் சபாரட்ணம் — அரியாலை.

★ வேலாயுதன் ஸ்ரீகாந்தன் — இருபாலை, கோப்பாய்.

★ வேலாயுதன் ஞானசேகரம் — மட்டுவில் கிழக்கு.

★ வேலுப்பிள்ளை நடராஜா — இயற்றாலை, கொடிகாமம்.

★ விக்னேஸ்வரன் தியாகராஜா — தனன்களப்பு.

★ வி. பதிகலிங்கம் — பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி.

★ வேதேஸ்வரி சுந்தரலிங்கம் — தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். (இ-5)

### துறைமுகத்தைச் சூழவுள்ள

# திருமலைக் கடற்பகுதியில் இரவில் மீன்பிடிக்கத் தடை!

## 98 மீனவர்கள் திங்களன்று கைது

திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றியுள்ள கடல் பிரதேசத்தில் இரவு நேரத்தில் மீன்பிடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தத் தடையை மீறி மீன்பிடிப்பவர்கள் கைது செய்யப்படுவர் என கடற்படை அறிவித்துள்ளது.

இதற்கிடையில்—இப்பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 98 மீனவர்கள் கைது செய்யப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களின் 42 வள்ளங்களும் தடுத்து வைக்கப்பட்டன.

நேற்று இந்த மீனவர்கள் திருகோணமலை நீதிவான் பி. சொர்ணராஜ் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். மீனவர்கள் ஒவ்வொருவருக்கும் நூறு ரூபா வீதம் அபதாரம் விதித்துத் தீர்ப்பளித்தார் நீதிவான்.

திருகோணமலைத் துறைமுகப் பிரதேசத்தைச் சூழவுள்ள கடல் பிரதேசத்தில் இரவு நேரத்தில் மீன் பிடிக்கத்தடைவிதிககப்பட்டுள்ளது. பகல் நேரத்தில் இப்பகுதிக்குள் மீன்பிடிக்க மீனவர்கள் அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3-5)

## ஆசிரியர்களுக்கு பொது அறிவு பரீட்சை

உலக ஆசிரியர் தினத்தையொட்டி தென்மராட்சிக் கல்விக் கோட்ட பாடசாலைகளைச் சேர்ந்த நிரந்தர ஆசிரியர்களிடையே நடத்தப்படும் ஆசிரியர் தினப் பொது அறிவு எழுத்துப் பரீட்சை நாளை பிற்பகல் 2.00மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெறும்.

தென்மராட்சி கல்விக் கோட்ட அலுவலகத்தினால் நடத்தப்படும் இப் பரீட்சையில் சித்திபெறும் ஆசிரியர்களுக்கு உலக ஆசிரியர் தினமான ஒக்ரோபர் 6ஆம் திகதி நடைபெறும் ஆசிரியர் தின விழாவில் வைத்து சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. (உ-117)

## 4 தமிழர் கைது

அத்தனகலையில் ஒரு லொட்ஜில் தங்கியிருந்த மூன்று தமிழ் இளைஞர்களும், ஒரு இளம் யுவதியும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் கிருஷ்ணபிள்ளை கதிரமலர் என்ற பெண் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் —

ஏனையோர் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த நால்வரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (உ-150-3)

## சுட்டுக்கொலை

திருகோணமலை மாவட்டம் தோப்பூர் பள்ளிக் குடியிருப்பு வீதித் தடைக்கு அருகில் வைத்து விடுதலைப் புலிகள் முஸ்லிம் நபரைச் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவத்தில் மேலும் ஒருவர் காயமடைந்தார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் பாதுகாப்புப் படையினருடன் தொடர்பு வைத்திருந்தவர் என மூதூர்பொலீஸார் தெரிவித்தனர். (உ-3)

## நாளை

### புரட்டாதி 16

வியாழக்கிழமை

திதி: பிரதமை

பின் இரவு 12.11 வரை

நட்சத்திரம்: அத்தம்

பிற்பகல் 4.11 வரை.

நவராத்திரி விரதாரம்பம்

சுபநேரம்: 7.32-9.02

ராகுகாலம்: 1.32-3.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

## நேர்முகப் பரீட்சை மேலும் நீடிப்பு

யாழ். மாவட்ட மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளரால் தற்போது நடத்தப்பட்டு வரும் மதுவரிப் பாதுகாவலர் நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரையும் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர் உளநலம் - 01

### குழந்தையின் வளர்ச்சியும் விருத்தியும் சார்ந்த தேவைகள்

★ உடல் உள விருத்திக்கு தாய்ப்பாலூட்டல் இன்றி அமையாதது.


★ நாலாம் மாதத்தில் இருந்து தாய்ப்பாலுடன் இணைந்து முழுமையாக்கவல்ல உணவு வகைகளைப் படிப்படியாகச் சேர்த்துக் கொள்ளுதல் அவசியம்.

★ இரண்டு வயதுக்குட்பட்ட காலத்தில் ஏற்படும் புரதச் சத்து ஊட்டக் குறைபாடு, பிள்ளையின் மூளை விருத்தியில் நிரந்தரப் பாதிப்பை ஏற்படுத்தி விடும்.

★ புலன்கள் ஒவ்வொன்றினதும் அதி உயர் விருத்திக்கு அவை ஒவ்வொன்றும் பல்வேறுபட்ட துண்டிகளுக்கு ஆட்படுத்தப்படுதல் அவசியம்.

★ எவரேனும் ஒருவருடன் குழந்தை மிக நெருக்கமான உறவு கொள்ளுதல், அதன் சிக்கலற்ற ஆளுமை வளர்ச்சிக்குப் பெருந்துணை புரியும்.

★ எமது அரவணைப்பால், அன்பு, ஆதரவு, பாதுகாப்பு ஆகிய உணர்வுகளைப் பிள்ளை பெறுகிறது.



ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரும் உலக உளநல நாளை ஒட்டி இக்குறிப்பு பிரசுரமாகிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ். நீதிவான் மன்று இடம்மாற்றப்பட்டது

யாழ். மஜிஸ்திரேட் நீதி மன்றம் புதிய இடத்துக்கு நேற்று முன் தினம் முதல் இடம் மாற்றப்பட்டுள்ளது.

பிரதான வீதியில் தற்போது இயங்கிய இடத்தில் போதிய வசதிகள் இல்லாத காரணத்தால் 4 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வசதியான ஒரு கட்டடத்துக்கு நீதி மன்றம் மாற்றப்பட்டுள்ளது.

புதிய இடத்தில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது மிதிவெடி ஒன்று நேற்று முன்தினம் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் —

பின்னர் இராணுவத்தினர் வந்து அதனை எடுத்துச் சென்றனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### வவுனியா முகாமில்

# தலையாட்டி முன்பாக நிறுத்தப்பட்ட 3,000 பேர்

மணிலா, ஒக். 1

வவுனியா நலன்புரி நிலையங்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ள சுமார் மூவாயிரம் வடபகுதி அகதிகளும் முகமூடி அணிந்த தலையாட்டிகளுக்கு முன்னிலையில் அண்மையில் நிறுத்தப்பட்டனர்.

ஐந்து நாள்களுக்கு முன்னரே குழந்தை ஒன்றைப்பிரசவித்த இளம் தாய் ஒருவரும் பத்து வயதான சிறுவன் ஒருவனும் கூட தலையாட்டி முன்னால் நிறுத்தப்பட்டனர்.

மூவாயிரம் பேரில் ஆறு பேர் அடுத்த கட்ட விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும்—

அவர்கள் துன்புறுத்தப்பட்டனர் என்றும் செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. (உ-6)

# யாழ். மருத்துவபீடத்தில் 47 டாக்டர்கள் சித்தி

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ். மருத்துவ பீடத்தில் இருந்து இம் முறை 47 மருத்துவ பட்டதாரிகள் வெளியேறுகின்றனர்.

இவர்களின் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின.

யாழ். மருத்துவ பீடத்தில் இருந்து 39 பேரும் —

பேராதனை பல்கலைக்கழகத்தில் பயின்ற யாழ். மருத்துவ பீட மாணவர்கள் 6 பேரும் —

கொழும்பு பல்கலைக்கழகத்தில் பயின்ற யாழ். மருத்துவ பீட மாணவர்கள் 2 பேரும் — சித்தியடைந்துள்ளனர்.

யாழ். மருத்துவ பீடத்தில் சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:-

இரண்டாம் வகுப்பில் சித்திபெற்றோர்

எஸ். அஜந்தா, பி.சி. சுரோஷினி (குழந்தை வைத்தியத்தில் சிறப்புச் சித்தி), ரி. கௌரிமனோகரி, ஆர். கிருஷாந்தி (மருத்துவத்தில் சிறப்புச் சித்தி) ரி. இந்திரமதி, எல். எம். இன்னாசிமுத்து, எம். பிரபாகரன், என். சாருமதி (அறுவைச் சிகிச்சையில் சிறப்புச் சித்தி), எஸ். சாந்தினி, என். சாந்தி, எஸ். சிவபாலசிங்கம் (அறுவைச் சிகிச்சையில் சிறப்புச்சித்தி), எஸ். சுகிர்தா, கே. தேவலோஜினி (மருத்துவம், குழந்தை வைத்தியம் ஆகிய வற்றில் சிறப்புச் சித்தி), எஸ். உஷாகௌரி, என். நளாயினி (மருத்துவத்தில் சிறப்புச்சித்தி)

சாதாரண சித்தியடைந்தோர்

எம். ஐங்கரன், ஆர். அருட்செல்வம், வி. பாலகிருஷ்ணன், என். பாமினி, ஜி. பி. தேவநாயகம், ஜி. கிருஷ்ண பவானி, கே. லோகநாதன், ஆர். பத்மராஜா, கே. புவனேந்திரநாதன், ஆர். ராதினி, கே. சசிதரன், எஸ். சத்தியவாணி, வை. ஆர். ஷாமினி, வி. சியாமளா, எஸ். சுசிகலாதேவி, ஏ. தமயந்தி, பி. தாரணி, கே. தேவநாயகி, பி. திருமாறன், கே. தியாகேசன், எஸ். வத்சலா, என். விஜிதா, என். யோகநாயகம், ஏ. ஜசிந்தா மங்களராணி, (உ-3)


எமது புதிய வெளியீடு

மம்முட்டி, கௌதமி நடித்த

**MR. அன்ந்தன்**

[ஒரிஜினல்]

என்றும் தரமான CD பிரதிகளுக்கு

**சுப்பஸோ வீடியோ**

**யாழ்ப்பாணம்.**

[சி/1668]


### பிக்குமார்...

(முதலாம் பக்கத் தொடர்)

றுகுணு பல்கலைக்கழக துணைவேந்தர் பரலாகர பஞ்ஞானந்த தேரர், மத்தொலுவே சோபித்த தேரர், முத்தெட்டுவே ஆனந்த தேரர், பிராஹ்மனவத்தே சீவலி தேரர் உட்பட பலர் அங்கு உரையாற்றினர். (உ-3-5-6)


## விற்பனையாகின்றன

**தீபாவளி வாழ்த்து மடல்கள்**

எங்களிடம் இவ்வாண்டிற்கான புது விதமான டிசைன்களில் வர்ணப்படங்களும், கட்டிங்காட், போஸ்காட் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை ஆகிக் கொண்டிருக்கின்றன.

வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் உண்டு.

தொடர்பு கொள்ளவும்:

**மக்மிலன் புத்தகசாலை**

**3, ஆஸ்பத்திரி வீதி,**

**யாழ்ப்பாணம்.** (சி/1664)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01 - 10 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### சென்றல் முகாம் படுகொலைச் சம்பவம்:

# பொலீஸார் சமுகம் தராததால் மரணவிசாரணை ஒத்திவைப்பு!

அம்பாறை சென்றல் முகாம் நாலாம் கொலனி தமிழ்க்கிராம் மீது கடந்த 22 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் இறந்த தமிழர்களின் மரண விசாரணை கல்முனை நீதிவானால் எதிர் வரும் 9 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இத்தாக்குதலில் இறந்த 6 பொது மக்களின் மரண விசாரணைகள் நேற்று கல்முனை நீதிமன்றத்தில் நீதிவான் அன்ரன் பாலசிங்கம் முன்னிலையில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

இந்த மரண விசாரணையில் சாட்சியமளிக்க 12 சாட்சிகளும் நீதிமன்றம் வந்திருந்தனர்.

பொலீஸார் நீதிமன்றத்தில் சமுகமளிக்காத காரணத்தால் மரண விசாரணையை நீதிவான் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதற்கிடையில் —

இந்தப் படுகொலைச் சம்பவங்களை அடுத்து சென்றல் முகாம் நான்காம் கொலனியில் இருந்து இடம்பெயர்ந்து சேனைக் குடியிருப்பில் தஞ்சம் புகுந்துள்ள — 375 குடும்பங்களைச் சேர்ந்த — ஆயிரத்து 398 பேரும், தமது கிராமத்தின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தராத வரையில் தாங்கள் அங்கு சென்று குடியேறப் போவதில்லை என்று சிவில் நிர்வாக அதிகாரிகளிடம் திட்டவட்டமாகக் கூறியுள்ளதாக அறிய வருகின்றது (உ-3-6-21)

# சென்றல் முகாம் பொலீஸாருக்கு ஆதரவாகத் தொடர் 'பிக்கெட்டிங்'

## இடமாற்றத்தை ரத்துச் செய்ய வற்புறுத்தல்

மட்டக்களப்பு, ஒக். 1

அம்பாறை சென்றல் முகாம் பொலீஸ் நிலையப் பொலீஸ் பொறுப்பதிகாரி உட்பட அப்பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலீஸார் அனைவரையும் கூண்டோடு இடமாற்றம் செய்யும் உத்தரவை ரத்துச் செய்யக் கோரியும் —

அங்கு ஊர்காவலர்களிடம் இருந்து பறித்த ஆயுதங்களை மீளஅவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரியும் —

அம்பாறை சென்றல் முகாம் 3 ஆம் கொலனி சிங்கள மக்கள் தொடர் 'பிக்கட்டிங்' போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினமும், நேற்றும் இந்தப் போராட்டங்கள் அம்பாறைச் செயலகம், பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகம் ஆகியவை முன்பாக இடம்பெற்றன.

புத்தபிக்குகளின் ஆதரவுடன் இந்த தொடர் போராட்டம் இடம்பெறுவதாக கூறப்படுகின்றது.

இந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தமது வீடுகளுக்குத் திரும்ப மாட்டோம் என்று தெரிவித்து 3 ஆம் கொலனியைச் சேர்ந்த சிங்களவர்கள் சுமார் இருநூறு பேர் அம்பாறை டி. எஸ். சேனநாயக்க மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளனர்.

அதே நேரம் —

அம்பாறை சென்றல் முகாம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட ஒரு தொகை பொலீஸார் அம்பாறைக்கு இடமாற்றம் பெற்று சென்றதாகவும் —

அவர்களது இடத்துக்கு அம்பாறைப் பொலீஸ் நிலையத்தில் இருந்து பொலீஸார் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (உ-21-3)

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்)

நிதிகள் ஜனாதிபதி மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க ஆகியோருடன் தனித் தனியாக பேச்சு நடத்தவுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் 4 ஆம் திகதி எதிர்க் கட்சித் தலைவரையும், 5 ஆம் திகதி ஜனாதிபதியையும் சந்தித்துப் பேசுவார்.

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., புளொட் ஆகியவற்றின் தலைவர்கள் இந்த வார இறுதியில் ஜனாதிபதியை சந்திக்க உள்ளனர். விரைவில் எதிர்க்கட்சித் தலைவரையும் அவர்கள் சந்திப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-5)

### காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்)

பலர் பிணையில் விடப்பட்டுள்ளதாகவும்—

சிலர் தொடர்ந்து தடுப்புக் காவலில் உள்ளதாகவும் —

விசாரணைக்குழு அறிவித்துள்ளது.

எனினும் இந்த 176 பேரில் விடுதலையானவர்கள் யார்? எப்போது விடுதலையாகினர்? பிணையில் விடப்பட்டோர் யார்? எப்போது பிணையில் விடப்பட்டனர்? தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் யார்? எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்? என்ற விவரம் ஏதும் இப் பட்டியலில் இல்லை. வெறுமனே 176 பெயர்களும், அவர்களின் விலாசங்களும், கைதான திகதிகளும் மட்டுமே பட்டியலில் காணப்படுகின்றன.

இதற்கிடையில்—

மேற்படி விசாரணைக்குழுவின் இறுதிக்கட்ட விசாரணைகள் எதிர்வரும் 16ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

இதுவரை இந்த விசாரணைக் குழு முன் சாட்சியமளிக்காதவர்களும் —

புதிய முறைப்பாட்டுக்காரர்களும்—இந்த விசாரணைக் குழு முன் சாட்சியம் அளிப்பர்

இதுவரை இந்த விசாரணைக் குழுவுக்கு முறைப்பாடு [illegible] செயலகத்துக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

### 11 முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த ஜூலை மாதம் இறக்கக்கண்டி கிராமத்தில் இருந்து கூட்டிச் செல்லப்பட்ட 32 முஸ்லிம்களில் 11 பேரே நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கடற்சமர் ஒன்றில் தப்பிப் பிழைத்து, கரை ஒதுங்கிய கடற்புலிப் போராளிகள் சிலரை இராணுவத்திடம் பிடித்துக்கொடுத்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இறக்கக்கண்டி கிராமவாசிகளான — 32 முஸ்லிம்களை — புலிகள் கூட்டிச் சென்று தடுத்து வைத்திருந்தனர் என்பது தெரிந்ததே.

கைதான தமது போராளிகள் விடுதலையாகும் வரை இந்த முஸ்லிம் விடுவிக்கப்படமாட்டார்கள் என புலிகள் தெரிவித்து வந்தனர்.

எனினும் அவர்களில் ஒரு மௌலவி மற்றும் முஸ்லிம் மாணவர்கள் உட்பட எட்டுப் பேரை புலிகள் பின்னர் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்தனர்.

எஞ்சிய 24 முஸ்லிம் மீனவர்களில் 11 பேரும் மற்றொரு சிங்கள மீனவருமே புடவைக் கட்டுப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட பன்னிருவரும் தாமாகவே நேற்று குச்சவெளி பொலீஸ் நிலையத்துக்குச் சென்று தாம் விடுவிக்கப்பட்டது தொடர்பான பதிவுகளை மேற்கொண்டனர். (உ-3-6-21)

### தீர்வுத்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுமுன் இந்த யோசனை சமர்ப்பிக்கப்படும்.

அரசின் தீர்வு யோசனைகளை முதலில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதா? அல்லது முதலில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதா என்பது குறித்து இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-21-3)

### உத்தேச...

(முதலாம் பக்கத் தொடர்)

முன்வைத்து விவாதித்த அமைச்சர்கள் இறுதியில் அதிகாரப்பரவலாக்கல் திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அமைச்சரவை அங்கீகரித்த தீர்வுத் திட்டத்தின் முழு வடிவம் பற்றிய தகவல் ஏதும் வெளியாகவில்லை அதில் அதிகாரப் பரவலாக்கல் அலகு குறித்து என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் வெளியிடப்படவில்லை.

### குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கோரியும்

வடக்கு—கிழக்குப்பகுதியில் அடையாள தொடர் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்த புளொட் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

இதன்படி நாளை வவுனியாவிலும்—

நாளை மறுதினம் திருகோணமலையிலும்—

எதிர் வரும் 6 ஆம் திகதி மட்டக்களப்பிலும்—

எதிர் வரும் 7 ஆம் திகதி மன்னாரிலும்—

அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளை நடத்த ஏற்பாடாகியுள்ளது.

''வடக்கு—கிழக்கில் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு அரசு தரப்பில் இருந்து சாதகமான பதில் கிடைக்காது விட்டால் உண்ணாவிரதப் போராட்டம் கொழும்புக்கும் விஸ்தரிக்கப்படும் என்று புளொட் அமைப்பின் உப தலைவர் கே. மாணிக்கதாஸன் தெரிவித்தார். (உ-21-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org